R. No. M. 2330

SIDDHANTHAM
Vol. 26—No. 1

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடியேனையுந் தாங்குதல்
என்கட னபணி செய்து கிடப்பதே'

மலர் 26 | நந்தன தை 1953 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| நாட்டு ஒலி | ... | 1 |
| திருக்கள்ளில் | ... | 6 |
| சிதைவுற்ற சிவாலயம் | ... | 9 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | ... | 15 |
| சேர் பொன்னம்பலம் இராமநாதன் | ... | 24 |
| சமாஜ மாதாந்திரக் கூட்டம் | ... | 30 |
| தமிழ்நாட்டு எல்லைத் தீர்மானம் | ... | 39 |
| ஆவின் பெருமை | ... | 40 |
| மதிப் | ... | 46 |

3L
R673m211, N28
153.26.1.
186886.

ந். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
ர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சித்தாந்த மகா சமாஜம்
(ஜான்ஸ் ரோடு), சைதாப்பேட்டை, சென்னை 15

## சமாஜ அறிக்கை

23-12-52 அன்று நடந்த சைவப்புலவர் தேர்வின் முடிவுகள் 1953 பிப்ரவரி இதழில் வெளிவரும்.

நமது சமாஜ 47வது ஆண்டு நிறைவு விழா 1953 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈரோட்டில் நடைபெறும்.

---

## செய்தித்திரட்டு

1. மார்கழித் திங்கள்விழா : தென்னாட்டிலும் ஈழநாட்டிலும் திருவெம்பாவை விழாக்கள் நடைபெறுகின்றன. பத்து நாட்களாக ஈழநாட்டு வெள்ளவத்தை பிள்ளையார் கோயிலில் விடியல் ஆறுமணிக்குத் திருவெம்பாவை முறையாக ஓதப்பட்டு வருகின்றது. அதனைக் கொழும்பு வானொலியில் அஞ்சல் செய்கின்றார்கள். காதாரக் கேட்பதிலே நெஞ்சார மகிழ்கின்றோம். தமிழ்நாட்டில் திருப்பாவை ஓதப்படினும் பொதுமக்களுக்காக, அஞ்சல் செய்வது கிடையாது. ஏனோ?

14—12—52. கோவை வித்தியாலயத்தில் ஆலயப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஒருவாரமாக அகண்ட பூஜை நடத்தப்பட்டது. திருமுறைகள் ஓதப்பட்டன. இறுதிநாளில் குருதேவர் ஆண்டுவிழா, மாகேசுவரபூஜை, சொற்பொழிவுகள், இன்னிசை முதலியவைகளோடு நடத்தப்பட்டது.

21—12—52. கோவை இரத்தினவிநாயகர் கோயில் : திருவெம்பாவைத் திருவிழா பத்து நாட்களாக விடியற்காலை 5-மணிமுதல் ஒழுங்காக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஒரு பெரியார் செலவு ஏற்றுக் கொண்டார்கள்.

22—1—52 தூத்துக்குடி "அருள் நெறித் திருக்கூட்டம்": ஆரம்பவிழா. குன்றக்குடி சுவாமிகள் தலைமையில் விழாவும், சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திரு. விஸ்வநாதன், S. மீனாட்சிசுந்தரனார், ஈசுவரவடிவு அம்மையார், சா. கணேசன் முதலியவர்கள் சொற்பொழிவுகளை ஆற்றினார்கள்.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | நந்தன தை 1953 ஜனவரி | இதழ் 1

## நாட்டு ஒலி

### பாவைப் பாடல்களில் ஒரு கருத்து

மார்கழித் திங்களில் வழக்கப்படி திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி ஓதிவருகையில், வைணவப் பிரபந்தங்களில் காணும் திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பவைகளை ஒத்திட்டுப் பார்க்கலாம் என்ற நினைவு தோன்றிற்று. அப்படிப் பார்க்கையில் பல அரிய ஒப்புவமைகள் காணப்பட்டன. வேற்றுமைகளும் தோன்றின. இவற்றையெல்லாம் தொகுத்துத் தனியான கட்டுரை எழுதினால் நன்றாக இருக்கும். அக்கட்டுரை பெரிதாக வளரும். ஆகவே அதனை விடுத்து இங்கே ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் எழுதுகிறேன்.

பாவைப் பாடல்கள் ஓதுவது விடியற்காலம். காலை நிலையை எடுத்து உரைக்கும் வகையில் விடியலின் வருணனை உரைக்கவேண்டியிருக்கிறது. இயற்கையில் காணும் காட்சிகள் பாடுபவரின் கண்முன் நிற்கின்றன. வானும் நிலனும் எந்த நிலையிலே தோற்றம் அளிக்கின்றன. வான்மீன்களின் ஒளி மறைகின்றது. கதிரவன் இருளைக் கடிந்து தன் கரங்களை வீசுகின்றான். இக்காட்சியைத் திருவண்ணாமலையில் கண்ட வாதவூரடிகள் அவ்வண்ணாமலையான் திருவடிகளில் வணங்கும் விண்ணவரின் முடிகளில் அணிந்த மணி

கள் அவ்வடிகளின் பேரொளியில் மழுங்கினாற்போல் கதிரவனின் கரங்களின்முன் வான்மீன்கள் ஒளி மழுங்கின என்று உவமிக்கின்றார். அந்த உவமையின் மேன்மையைச் சற்று சுவைத்துப் பாருங்கள்.

“ அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகல ”

என்ற வருணனை எத்துணைச் சிறந்தது ஆராயுங்கள்.

இனி, திருப்பாவை பாடிய ஆண்டாளும் விடியலில் தோன்றும் இயற்கைக் காட்சிகளை வெகு தெளிவாக உரைக்கின்றாள். இயற்கைக் காட்சிகளைக் காட்டிலும் செயற்கைக் காட்சிகளை மிகவும் தெள்ளத் தெளிவாக விவரிக்கின்றாள். அவற்றை வேறொரு முறை எழுதுவோம். இயற்கைக் காட்சிகளை வருணிக்கும்போது உவமைகளை எடுத்து உரைத்துப் புலமைப் பெருமைகளில் ஆண்டாள் புகவில்லை. எதிரே தெரியும் வானில் திகழும் இயற்கை அதிசயங்களை வருணிக்கின்றாள். வெட்ட வெளியில் கூட்டமாகக் கூடிப் பாடும் இளங் கன்னிகளுக்கு எளிய காட்சிகள் அன்றோ தோன்றும். வானத்திலே மீன்கள் இன்னும் மறையவில்லை. அவைகள் மறையும் தருணத்தில் இருக்கின்றன. சிறு மீன்களைக் காட்டிலும் ஒளிதிகழும் கோள்கள் தான் நன்றாகத் தெரிகின்றன. அவைகளில் வெள்ளியும் வியாழனும் சிறந்தவைகள். விடியற்காலையில் வெள்ளி எழுந்திருக்கும். வியாழனோ உறங்கத் தொடங்கும். (தேவகுரு மறைகிறான். அசுரகுரு தோன்றுகிறான்; என்ன கருத்தோ ?) அப்போது விடிந்து போகிறது என்று பறவைகள் பாடுகின்றன. இந்த இயற்கைத் தோற்றமே சிறுமிகள் கண்களில் தெரிகின்றது. இதனை ஆண்டாள் எவ்வாறு வருணிக்கின்றாள் ?

“ பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழன் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் ”

186896



என்று தம் கண்முன் தோன்றும் தோற்றத்தையே எளிய நெஞ்சு எழுச்சியாக வருணிக்கின்றாள். இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பைக் கவனியுங்கள். வான்மீன்களைக் கண்டு களித்த இப்பெரிய அடியார்கள் இருவர்களும் இயற்கை வனப்புக்களில் வைத்திருக்கும் அளவுகடந்த பற்றைப் பற்றி அதிகம் கூறுவானேன்.

இனிக் கவிதை உள்ளங்கள் பரிமளிக்க, அவற்றில் காணும் சில செய்திகள் தற்கால அறிஞர்களின் ஆராய்ச்சி உள்ளங்களைக் கிளப்பிவிடுகின்றன. எடுத்துக் காட்டாக மேலே கூறிய ஆண்டாள் திருவாக்கில், “ வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று ” என்ற இயற்கைச் செய்தியைக் காண்கின்றோம். இதில் அடங்கிக்கிடக்கும் உண்மை என்ன? ஆண்டாள் கண்ட மார்கழித் திங்கள் விடியல் தோற்றத்தில் “ வெள்ளி என்ற கோள் எழும்பிற்று, வியாழன் என்ற கோள் உறங்கிற்று ” என்று அறிகிறோம். அதாவது அந்த நாளில் வியாழன் மேற்கே மறைந்தது, வெள்ளி கிழக்கே எழுந்தது என்று பொருள்படும். இவ்வாறு இன்றைக்கு நடைபெறுகிறதா !

இந்த நந்தன ஆண்டில் இந்த மார்கழித் திங்களில், வானத்தை நோக்கினால், இரவு எட்டு மணிக்கு வெள்ளி மேற்றிசையில் இராசியில் இருக்கக் காண்போம். வியாழனோ உச்சியில் இராசியில் இருக்கக் காண்போம். இரவு சிறிது நேரத்தில் இரண்டும் மேற்கே மறைகின்றன. வெள்ளி ஒன்பது மணியிலும், வியாழன் 12 மணியிலும் மறைகின்றன. இவைகளை விடியலில் காணல் அரிது. ஆகவே ஆண்டாள் கூறுகிற கூற்று இக்காலத்திற்கு உதவாது. இதைக் கொண்டு ஆண்டாள் கூறியதில்லை எப்போதும் இருக்கவில்லை என்று கூறலாமா ? இல்லவே இல்லை. ஆண்டாள் உலகில் தோன்றிய காலத்தில் அவ்வாறு இருந்திருக்க வேண்டும். அது எப்போது ? கணிகர்கள் கணக்கிட்டுக் கூறுவார்களாக.

### பள்ளியெழுச்சிகளில் ஒரு கருத்து

பள்ளியெழுச்சி யென்பது விடியற்காலையில் இறைவனைத் துயிலெழுப்பும் முறையில் எழுந்த பாடல்களின்

தொகுதி ஆகும். சைவத் திருமுறையில் வாதவூரடிகள் அருளின திருப்பள்ளியெழுச்சி அமைந்திருப்பதுபோல் வைணவத்தில் தொண்டர் அடிப்பொடி யாழ்வார் அருளிய திருப்பள்ளியெழுச்சி ஒன்று இருக்கின்றது. வாதவூரடிகள் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் பெருமானைத் துயிலெழுப்பப் பாடியிருக்க ஆழ்வார் திருவரங்கத்தில் உறங்கிக்கொண்டிருந்த பெருமாளைப் பாடியிருக்கின்றார். இரண்டிலும் உட்பொருள் ஒன்றுதான். விடியற்காலத்தின் செய்திகள் இரண்டிலும வெகு அழகாக வருணிக்கப் படுகின்றன.

“ விடியலில் தாமரை மலர்கள் மலருகின்றன. கதிரவன் தோன்றிட இருள் போகின்றது. வண்டுகள் மலர்களில் ஒலிசெய்து பாடுகின்றன. குயில்கள் பாடுகின்றன. கோழிகள் கூவுகின்றன. சங்குகள் முழங்குகின்றன. மீன் ஒளி மழுங்கி கதிரவன் ஒளியொடு கலக்கின்றது. இன்னிசையால் மறைகளை ஓதி உன்னை அழுது மக்கள் தொழுகின்றார்கள். நின் கருணையை வியந்து அதனைப் பெறுவதற்காக அன்பர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எழுந்தருளுவாயாக ” என்று அடிகள் அருளிச் செய்திருக்கிறார்கள். அக்கருத்துக்களைக் கொண்டு திருப்பாடல்களை நாடோறும் சைவ அன்டர் காலை எழுந்ததும் பாடுகின்றார்கள்.

“ கதிரவன் கிழக்கே உதிக்கிறான். இருள் நீங்கியது. மலர்கள் விரிந்து தேனைக் சொட்டுகின்றன. விண்ணவர்களும் மண்ணரசர்களும் நின் தரிசனம் காணத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். முல்லை மலரில் காற்று வீசுகின்றது. அன்னம் சிறகுகளை உலர்த்திக்கொண்டு துயிலை ஒழித்தது. கமுகின் பாளையில் காற்றடிக்கிறது. எருமைகளை மேய்க்கும் இடையர்கள் குழலொலியும் எருது மணி ஓசையும் கழனியில் வண்டுகளின் ஆரவாரமும் எங்கும் படர்கின்றன. (ஆங்கிலக் கவி கிரே எழுதிய இரங்கற் பாடலோடு ஒப்பு நோக்குக.) பலவகைத் தேவர் கூட்டங்கள் நினது தரிசனத்திற்காக வாயிலில் காத்துக்கொண்டிருக்கின்றன.



கண்ணாடி முதலிய மங்கலப் பொருள்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு நின்னைக் கண்டு நின் அருள்பெற விழைகின்றார்கள். ஆகவே இறைவா பள்ளி யெழுந்தருள்வாய் ” என்று ஆழ்வார் அருளியிருக்கின்றார். இதனை நாள்தோறும் பெருமாள் கோயில்களில் பாடித் தொழுவார்கள்.

இந்த இரண்டிலும் கருத்து ஒன்றே. அது துயில் எழுப்புவதாகும். ஆனால் அடிகள் கூறிய கூற்றில் இயற்கை வனப்புக்களைக் கூறி அன்பர்கள் அருள் பெறவேண்டி நிற்கிறார்கள் என்பது மட்டும் காணப்படுகிறது. ஆழ்வார் கூறிய கூற்றில் அன்பர்கள் மட்டும் அன்றி விண்ணவர்களும் அவர்களில் யக்ஷர், கின்னரர், வித்தியாதரர் முதலிய பல வகுப்பார்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஆழ்வார் கூறுகையில் தேவர் தொகுதியில் பன்னிரண்டு ஆதித்தியர்கள், பதினொரு ருத்திரர்கள், மயில்வாகனத் தாறுமுகன் ஒன்பது மருத்துவக் கணங்கள் எட்டு வசுக்கள் முதலியோர் கூறப்பட்டுள்ளார்கள். இவர்களும் திருமாலின் அருள் வேண்டிக் காத்திருக்கிறார்களாம். இதனைக் கூறும் பாசுரம்

“ இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலினன் அறுமுகன் இவனே
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி ”

என்று சொல்லுகிறது. இதில் உருத்திரரை இறையவர் என்றும் முருகனை மயிலினன் அறுமுகன் என்றும் விளக்குகிறது. வைணவர்கள் சிவபெருமானுக்கும் முருகக் கடவுளுக்கும் காட்டும் மதிப்பு அறிக. ‘மயிலினன் அறுமுகன்’ என்ற சொற்களுக்குப் பொருள் காணும் வகையில் வைணவ உரையாசிரியர்கள் ‘தேவசேனாதிபதியான சண்முகன்’ என்று பொருள் விரித்திருக்கிறார்கள். ஆகவே முருகக் கடவுளை தேவசேனாதிபதி என்னும் கந்தபுராண வரலாற்றை ஒப்புக் கொள்ளும் வகையிலும் அவ்வுரை தோற்றம் அளிக்கிறது. அதே பாசுரத்தில் “ குமர தண்டம் புகுந்து ” என்ற சொற்றொடருக்கு “ தேவசேனா சமுகங்கள் புகுந்து ”

என்று பொருளும் தண்டம் என்ற சொல்லுக்கு தண்டு என்ற பொருளும அது கொண்டு குமரன் தேவசேனைகளை நடத்தும் சேவ சேனாதிபதி என்றும் விளக்குகின்றார்கள். இந்த வகையிலும் சைவ சரிதங்களின் மேன்மைகள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

ஆழ்வார்கள் காலத்தில் தற்போது உள்ள அழுக்காறு இருக்கவில்லை என அறியவேண்டும். இதற்குப் பாசுரங் களில் சான்றுகளே யன்றி ஆலயங்களிலும் உருவத்தோற் றங்களும் காண்கின்றன. நெல்லை வட்டத்துக் கோயில் களில் இவை மிகவும் காண்கின்றோம். நான்கனேரி, திருக் குறுங்குடி, திருக்குருகூர் முதலிய கோயில்களில் மண்டபங் கள், கோபுரங்கள், கற்றூண்கள் இவைகளில் நடராசப்பெரு மான் திருவுருவங்களும் சிவபெருமான் திருவிளையாடல் களைக் காட்டும் திருவுருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

பரமவைணவர்கள் வழிபாடு செய்யும் இந்தக் கோயில் களில் சிவசரிதைகள் எவ்வாறு ஏற்பட்டன. தற்காலத்துப் பேத உணர்ச்சி படைத்த வைணவர்கள் இவைகளுக்கு என்ன விளக்கம் கூறுகிறார்கள்.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் மேலே கூறிய திருப் பள்ளியெழுச்சிப் பாசுரம் படித்தபோது தோன்றிற்று. இக்கருத்துக்களை நன்கு ஆராய்ந்து தக்க முடிபுக்கு மக்கள் வருவார்களாக.

---

## 2. தலப்பகுதி

# 1. திருக்கள்ளில்

**(கோவை கிழார்)**

1. இடம்: செங்கல்பட்டு வட்டத்தில் சென்னையி லிருந்து வடமேற்கே வடபெரும் பாதையில் சோழபுரம் தாண்டி பெரியபாளையம் கிளைப்பாதையில் கண்ணியம்பேறூர் வரையில் சென்று, தெற்கே கிளைப்பாதையில் இரண்டு கல் சென்றால் இந்தத் தலம் அடையலாம். குடதலை ஆற்றின்



வடகரையில் அரைக் கல்லில் உள்ளது. புழலேரியிலிருந்து அத்திப்பேட்டுச் சத்திரத்து வழியாக வடக்கே இரண்டு கல் நடந்து ஆற்றையும் கடந்தாலும் இதனை அடையலாம். இது இப்போது திருக்கள்ளம் என்ற பெயரால் வழங்குகின்றது. இது தொண்டை நாட்டுத் திருப்பதி. சென்னையிலிருந்து பெரியபாளையம் பஸ்ஸில் செல்வதே எளிது. சிறிய ஊர்.

2. கோயில்: சிறியது. சுற்றுமதிலுண்டு. அதற் குள்ளே மூன்று தளிகளே இருக்கின்றன. சுவாமிகோயில் கருவறையின. அடிப்பகுதி கருங்கல்லால் ஆகியது. அதில் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன் படி எடுக்கப்பட்டன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நகரத்துச் செட்டியார் இக்கோயிலைச் செப்ப னிட்டிருக்கிறார். அதன் அமைப்பு சதுரமாக இருக்கிறது. அடிப்பகுதி 6 - அடிவரை கருங்கல். மேலே செங்கல். அம்மன் கோயில் தனிச் செங்கல் கட்டடம். நடராசர் திருச்சபை இல்லை.

3. தீர்த்தம்: கோயிலுக்கு முன்புறத்தில் திருக் குளம் அமைந்திருக்கிறது. அதனைச் சுப்பராய செட்டியார் என்ற பேரிகுலத்து வணிகர் திருப்பணி செய்திருக்கிறார். கோயிலில் ஒரு வில்வமரம் பெரிதாய் இருக்கிறது. அதன் காய்கள் மிகப் பெரியவை. ஆறு குடதலை ஆறு. இதனை கொரத்தலை என்றும் குசஸ்தலி என்றும் கூறுவார்கள்.

4. மூர்த்திகள்: சுவாமி சிவாநந்தர்; தேவி - ஆனந்த வல்லி. சுவாமிபெயர் தேவாரத்தில் "கள்ளில் மேய அண் ணல்" என்றே குறிக்கப்பட்டுள்ளது.

5. பாடல்: ஞானசம்பந்தர் பாடல் ஒன்று உண்டு. முதல் திருமுறை: பண் - வியாழக்குறிஞ்சி.

"முள்ளின் மேயமுது கூகைமுரலும் சோலை
வெள்ளின் மேயவிடு கூறைக்கொடி விளைந்த
கள்ளில்மேய வண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர் வெய்தல் ஒருதலையே"

இதனாலே இத்தலத்தில் முட்செடிகளும், கூகைகளும், உள்ள சோலை சூழ்ந்தது எனவும் கூறையின்மேல் கொடி

களும், கள்ளிகளும் சூழ்ந்த இடம் எனவும் அறியலாம். அக்காலத்தில் செழிப்பில்லாத ஒரு தனி இடத்தில் ஏற்பட்டிருந்த தலம் என்னலாம். இப்போதும் அத்தனைச் செழிப்பு எனக் கூறமுடியாது.

கள் + இல்—கள்ளிச்செடி படர்ந்த இல்லம் எனப் பொருள்படும். காட்டில் கள்ளிச் செடிகளின் இடையில் இருந்த கோயில் எனக் கூறவேண்டும். பெரியபுராணத்தில் சம்பந்தர் சென்ற செய்தியைக் குறிப்பாகக் கூறாமல் திருக்காளத்தி விட்டுத் திருவேற்காடு சென்ற வழியில் "மலையும், கானும், முதல்வனால் உறைபதி பலவும் போற்றி" (1029) என்றவரையில், இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது.

6. ஐதீகம்: பிருகு முனிவர் பூசித்து வழிபட்டதாகச் சொல்லுவர். (சதாசிவ செட்டியார் பதிப்பு) புராணச் செய்திகள் கிடைக்கவில்லை.

7. ஆட்சி: நான் சென்றபோது சிவசுவாமி குருக்கள் மகன் ஆறுமுகக் குருக்கள் அர்ச்சகராகவும் பார்வையாளராகவும் இருந்தார் (1941). கோயிலுக்கு நிலம் உண்டு. 300 மாக்கால் கிடைக்கும்.

8. ஏனைய கோயில்கள்: ஊரில் மற்றொரு பெருமாள் கோயில் உண்டு. புதிய கட்டடம். அருகில் பிரசித்தி பெற்ற பெரியபாளையம் பவானியம்மன் கோயில் உண்டு. அது ஆரணி நதிக்கரையில் ஒரு பெரிய சோலையில் அமர்ந்துள்ளது. ஆடித்திங்களில் மிகப்பெரிய திருவிழா நடக்கும். ஆயிரக்கணக்கான மக்கள் பிரார்த்தனைக்குச் செல்வார்கள். ஆணும், பெண்ணும் வேப்பிலை கட்டிக்கொண்டு ஆலயம் சுற்றுவது வழக்கம். தருமகர்த்தர் வெங்கல் சமீன்தாரணி. மிகுந்த வருமானபடி உண்டு. ஆற்றின் மறுகரையில் ஐமுகத்தீசர் என்ற சிவாலயம் இருக்கிறது. பாழ் அடைந்திருக்கிறது. கள்ளிலுக்குப் போகும் வழியில், புண்ணியகோடி ஈசுவர ஆலயம் என்ற ஒரு கோயில் உண்டு. அது குடதலை ஆற்றங்கரையில் இருக்கிறது.

---

# 2. சிதைவுற்ற சிவாலயம்

(சு. சுவாமிநாத தேசிகர்)

## 1. திருஎருக்கத்தம்புலியூர்

படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே.

—திருஞானசம்பந்தர்

1. இருப்பிடம்: இத்தலம் தென்னிந்திய இருப்புப் பாதையில் விழுப்புரம் - திருச்சிராப்பள்ளிக்கு இடையிலுள்ள விருத்தாசலம் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஏழுமைல் தூரத்தில் உள்ளது. (கல்லவழி).

வரலாறு: வியாக்கிரபாதருஷி பூஜித்த தலங்கள் ஐந்து: 1. பெரும்பற்றப்புலியூர் (தென்புலியூர்) சிதம்பரம். 2. திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்). 3. ஓமாம்புலியூர். 4. திருஎருக்கத்தம்புலியூர். 5. பெரும்புலியூர். இவ்வைந்தில் நான்காவதாகக் கூறும் தலமே இத் திருஎருக்கத்தம்புலியூராகும். இப்பதி நடுநாட்டுத் தலங்கள் 22-ல் ஒன்றாக அமையப்பெற்றுள்ளது.

வெள்ளெருக்கினை தலவிருக்ஷமாகக் கொண்டமையாலும், வியாக்கிரபாதருஷி பூஜித்தமையாலும் இத்தலத்திற்குத் தேவாரத்தில் திருஎருக்கத்தம்புலியூர் என அழகாகக் கூறப்பட்டுள்ளது. இது இராஜேந்திரப்பட்டணம் எனவும் வழங்கி வருகிறது.

இத்தலத்தினைப் புகழ்ந்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் "பெண்ணணவியாகும் பித்தா பிறைசூடி, யெண்ணு மெருக்கத்தம் புலியூருறை கின்ற" எனப் பாடியுள்ளார்.

2. திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்: இத்தலத்தில் திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் திருவவதாரஞ் செய்து சிவபக்தி செய்துவரும் நாளில் திருஞானசம்பந்தமூர்த்தி

சுவாமிகளின் பிரபாவத்தைக் கேட்டுத் தாமும் மனைவியாரும் சீகாழிக்குச் சென்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைத் தரிசித்து அவராணையின்படி திருஞானசம்பந்தருடன் இருந்து அவர் பாடும் தேவாரப் பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் திருத்தொண்டு புரிந்து அவரது திருக்கல்யாணத் தில் சோதியிற் கலந்தருளினார்.

3. சிறப்புகள் : திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் திருவவதாரஞ் செய்த தலம் ; இத்தலத்திலுள்ள சிவ பெருமானைப் (நீலகண்டப் பெருமானைப்) புகழ்ந்து திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார்.

4. திருஉருவங்கள் : இவ்வாலயத்தில் திருஞானசம் பந்தர், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் ஆகிய இருவரின் திரு உருவங்களும் இருக்கின்றன. இவ்வாலய மேலைப் பிராகாரத்தில் உள்ள முருகன் வள்ளி தேவசேனையுடன் மயிலின்மீது அமர்ந்து அருளொழுகும் திருமேனியுடன் காட்சியளிக்கிறார். மற்றும் இவ்வாலயத்தில் ஏனைய பரிவார மூர்த்திகளின் திருஉருவங்களும் இருக்கின்றன.

5. ஆலய அமைப்பு : இவ்வாலயம் கிழக்குப் பார்த்த சந்நிதானம். சுவாமி சந்நிதானம் கிழக்குப் பார்த்தும் தேவியார் சந்நிதானம் தெற்குப் பார்த்ததுமாக அமைந் துளது ; இவ்வாலயத்திற்கு முன் உள்ள தீர்த்தம் மிக அழகாகவும் பெரிதாகவும் காணப்படுகிறது. இவ்வாலய மேற்குப் பிராகாரத்தில் தலவிருக்ஷமாகிய வெள்ளெருக்கஞ் செடி இருக்கிறது.

6. திருவிழா : இவ்வாலயத்திற்குப் பிரதி பங்குனி உத்திரம் தோறும் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

7. பூஜைகள் : இவ்வாலயத்திற்கு அநுதினமும் நான்கு காலபூஜைகள் நடைபெறுகின்றன.

8. நிர்வாகம் : இவ்வாலயம் சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்ம கர்த்தர்களால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

9. திருப்பணி : இவ்வரும்பதி திருநீலகண்டயாழ்ப் பாண நாயனார் அவதரித்த தலமாக இருந்தும், திருஞான



சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் தேவாரப் பாடல்கள் பெற்ற பெருமை உடையதாக இருந்தும், இவ்வாலயம் மிகவும் சிதைவுற்று பழமையாகக் காணப்படுகிறது. சுற்றுப்புற மதில்கள் எல்லாம் இடிந்து மரஞ்செடி கொடிகளெல்லாம் முளைத்துக் காடாக இருக்கின்றன ; கோயிலின் முன் உள்ள மண்டபங்களும் தூண்களும் கருங்கல் திருப்பணி. அவைக ளெல்லாம் நழுவி விழும் நிலைமையில் இருக்கிறது.

இவ்வாலயத்தில் வௌவால்கள் எண்ணிறந்தன அடைந்திருக்கின்றன. இவ்வாறு இடிந்தும் மிகவும் சிதை வுற்றும் இருக்கும் இவ்வாலயத்திற்குப் போதிய அளவு வருவாய் இல்லாத காரணத்தினால் பொருள்வளம் படைத்த புண்ணியசீலர்களில் யாரேனும ஒருவர் காலதாமதம் செய் யாது உடன் திருப்பணி செய்ய முன்வர வேண்டுமாய் மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

10. திருநாமங்கள் : சுவாமி - நீலகண்டர்; தேவியார் - நீலமலர்க்கண்ணியார் ; தலவிருக்ஷம் - வெள்ளெருக்கஞ் செடி ; தீர்த்தம் - சூரிய புஷ்கரணி. இதற்குத் திருஞானசம் பந்தர் பாடிய தேவாரப் பதிகம் ஒன்றுளது. அது வருமாறு:

“ ஏரார் எருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலை யிவைவல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே ” 11

---

## 2. பாவநாசம் 108 சிவலிங்கம்

பாவநாசா வுன்பாதமே யல்லால், பற்றுநான்
மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
மூவுலகுருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கலாய் நிமிர்ந்தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

—திருவாசகம் - வாழாப்பத்து

சிவன் கோயில்கள் எல்லாம் ஒரு சிவலிங்கத்தை அடிப்படையாகக்கொண்டு விளங்குவன. ஆனால், இக்கோயிலோ அதன் பெயருக்கேற்ப 108 சிவலிங்கங்களைச் சிறப்பாகக் கொண்டு பெருமை பெறுகிறது. எக்கோயிலிலும் இத்தனை சிவலிங்கங்கள் இவ்வாறு அமைக்கப்பெற்று இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால், இந்த அருமை யாவராலும் போற்றத்தகுந்தது.

1. இருப்பிடம் :—இந்த நூற்றெட்டுச் சிவாலயம் தஞ்சை ஜில்லா பாவநாசம் தாலுக்காவில், பாவநாசம் எனும் சிறு நகரைச் சேர்ந்த வங்காரம்பேட்டை எனும் சிற்றூரில் இருக்கிறது. இது தென்னிந்திய இருப்புப் பாதையில் தஞ்சாவூர்–கும்பகோணத்திற்கு இடையில் உள்ள பாபநாசம் புகைவண்டி நிலையத்திலிருந்து (வட) மேற்கே முக்கால் மைல் தூரத்திலிருக்கிறது. குடமுருட்டி ஆற்றின் தென் கரையிலே இவ்வாலயம் அழகுற அமைந்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் தீர்த்தத்திற்குப் பெயர்போன (திருக்குற்றாலம்) பாவநாசம் ஒன்றிருக்கிறது.

2. பழைய வரலாறு:—திரு இராமச்சந்திரர் தண்டகாரண்யத்தில் சீதை இலக்குமணருடன் வசித்தபொழுது கரன், தூஷணன் எனும் இரு அரக்கர்கள் சூர்ப்பனகையின் பழிக்குப் பழிவாங்க வந்து எதிர்த்தார்கள். அவர்களைக் கொன்ற பாவம் நீங்கும்பொருட்டு இவ்வூரில் சிவலிங்கங்களை நாட்டிப் பூசித்துத் தன்பாவம் தீர்க்கப்பெற்றதால் பாவநாசம் என்றாயிற்று என்பர்.

சீதையை மீட்க இலங்கையில் இராவணனைக்கொன்ற பெரும்பாவம் இராமேச்சுரத்தில் வழிபட்டதால் இராமரை விட்டு நீங்கினும், அவரது வீரர்கள் எதிரியின் சேனைகளைக் கொன்ற தீவினை தொடர்வதைக்கண்டு இவ்வூரில் 108 சிவலிங்கம் நிறுவிப் பூசித்துப் பாவம் நாசமாகப் பெற்றதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என்றும் சொல்லப்படுகிறது. இப்பூசைக்கு வேண்டிய லிங்கங்களைக் கொண்டுவர அநுமாரை அனுப்பியிருந்தும் அவர் குறித்த காலத்தில் வராததால் சீதாதேவியால் நிறுவப்பட்ட லிங்கங்களைப் பூசித்தனர்



எனவும் பின்னர் அநுமார் கொண்டுவந்த இலிங்கத்தை நிறுவுவதற்காக அவர் முன்வைத்த இலிங்கத்தைப் பெயர்த்தெடுக்கப் பல வகையில் முயன்றும் பலிக்காமல் கடைசியாக மூன்று மைல் வடக்கிலுள்ள ஊரில் விழுந்ததால் அவ்வூர் அநுமானூர் எனப் பெயர் பெற்றதெனவுங் கூறப்படுகிறது. இதனால் இவ்வூர் கீழைஇராமேச்சுவரம் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கு வழிபடுவோர் கொடும் பழி பாவங்களினின்றும் நீங்குவர். இங்கே மகாசிவராத்திரியன்று சிறப்பாக வழிபாடுகள் நடைபெறுகின்றன.

3. சரித்திர வரலாறு:—சுவாமிகோயில் அர்த்த மண்டபத்தின் வடக்கு நிலைக்கல்லில் உள்ள கல்வெட்டிலிருந்து இவ்வூரின் பெயர் திருமா(ல்)புரம் எனவும் இந்நாயனார் பெயர் பெரியதளி மகாதேவர் எனவும் தெரிகிறது. திருஇராமேச்வரம் மால்செய் கோயில் என அப்பர் அடிகளால் அழைக்கப்படுவதற்கேற்ப இவ்வூர் திருமா(ல்)புரம் எனவும் இந்நாயனார் இக்கோயிலிலுள்ள ஏனைய சிவலிங்கங்களைவிடப் பெரிய கோயிலில் வீற்றிருப்பதால் பெரியதளி மகாதேவர் எனவும் அழைக்கப்படுவது பொருந்தியதே. அம்மன் கோவில் அர்த்த மண்டபம் நிலைக்கற்கள் இரண்டில் உள்ள கல்வெட்டுகள் முதலாம் இராசராசன் காலத்தவை (985-1014 கி. பி.) எனத் துணிவாய்க் கூறலாம். இதுபோன்ற இன்னும் அநேகக் கல்வெட்டுகளும் இவ்வாலயத்தில் உள்ளன.

4. பாவநாசம் 108 சிவாலய அமைப்பும் திருஉருவும்:—இவ்வாலயத்தில் சுவாமி சந்நிதானம் மேற்குப் பார்த்ததும் தேவியார் சந்நிதானம் தெற்குப் பார்த்ததுமாக அமைந்துளது. இவ்வாலயத்தின் நீளம் 216 அடியும் அகலம் 130 அடியுமாகும். இவ்வாலயத்திற்கு வடபால் படித்துறையோடு கூடிய திருக்குளம் தோன்றுகிறது. இதில் விதிப்படி மூழ்கினால் பல பாவங்களும் நோய்களும் நீங்கும். இங்கு காணப்படும் (இராமலிங்கம்) சிவலிங்கப் பெருமான் சுமார் 6 அடி உயரத்திற்குமேல் பளபளப்பாயும் அழகுடனும் காணப்படுகிறது.

இங்கு திருச்சிற்றம்பலவர், சிவகாமசுந்தரி, ஆடிப்பூர அம்மன், பிறைசூடிப்பெருமான் (அம்மன் குழந்தைவேற் பிள்ளையுடன்), பிள்ளையார், முருகன் (வள்ளி தெய்வானை யுடன்) ஆகிய விழாத் திருவுருவங்கள் காட்சியளிக்கின்றன. இவ்வாலய வடக்குப் பிராகாரத்தில் உள்ள நீண்ட மண்டபம் நீளம் 113 அடி. அகலம் 24 அடி. இதில் பெரும் பகுதி மூன்று வரிசையாகவும், கீழ்ப்புறத்தில் 5 வரிசை யாகவும் 106 சிவலிங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றுள் மேலக்கோடியிலுள்ள மூன்றும் பெரியன; அவற்றுள் நடுவேயுள்ளது மிகப்பெரியது. இந்த 106 சிவ லிங்கத்தோடு மூல சிவலிங்கம் (இராமலிங்கம்) ஒன்றையும், இவ்வாலயத்திற்குத் தென்பால் உள்ள கோயிலில் அநுமார் கொண்டுவந்ததாகக் கூறப்படும் இந்தச் சிவலிங்கம் ஒன்றை யும் சேர்த்து 108 சிவலிங்கமாகச் சேர்க்கப்பட்டு 108 சிவா லயம் என்று அழைக்கப்பட்டுவருகிறது. இவ்வாலய கீழ்ப் பிராகாரத்தில் தல விருட்சமாகிய வில்வமரமும், அதன் அருகில் நால்வர் திருஉருவங்களும் அமைக்கப் பெற்றிருக் கின்றன. மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளின் திருஉரு வங்களும் அமைப்பெற்றிருக்கின்றன.

5. திருப்பணி :—இவ்வாலயத்திற்கு ரூ. 1425—0—0 ரூபாய் செலவில் திருப்பணி செய்து சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 10ம் (24—6—1942) தேதி அன்று சுமார் 1000 ரூபாய் செலவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெற்றது.

6. நிர்வாகம் :— இவ்வாலயம் சென்னை இந்து அற நிலையப் பாதுகாப்புக் கழகத்தினரால் ஏற்படுத்தப்பட்டிருக் கும் தர்மகர்த்தர்களால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

7. வரவு செலவு :—இவ் வாலயத்திற்கு 5½ வேலி நன்செய் புன்செய் நிலங்களுண்டு. இவற்றிலிருந்து ஆண்டு தோறும் 700 கல நெல்லும் ரூ. 1000 புன்செய் பகுதியும் வருகின்றன. மோகினி பணம் ரூ 145-13-0 வருகிறது. இதிலிருந்து வாயுதா ரூ. 403-9-0வும் மார்கழி மாதம் திருவாதிரை உற்சவத்திற்கு ரூ. 150தும் போகப் பாக்கி



ரூபாயை நித்தியப்படி பூஜை நைவேத்தியத்திற்குச் செல வழிக்கப்படுகிறது.

8. நூல்கள்:—இவ்வாலயத்திற்குச் சமீபத்தில் 1-2-44 மாஜி தலைமை ஆசிரியர் தமிழ்மணி உயர்திருவாளர் **சாமி வேலாயுதம் பிள்ளை** அவர்களால் இவ்வாலய வரலாற்றினை எழுதிப் புத்தகமாக அச்சிட்டு (இலவசமாக வழங்கி வருகி றார்கள். வேண்டுவோர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்) வெளியிட்டுள்ளார்கள்.

9. திருநாமங்கள் :—சுவாமி இராமலிங்கேச்சுரர் தேவி யார் பர்வதவர்த்தனி. தலமரம்-வில்வம்.

---

## 4. சாத்திரப் பகுதி

# சிவப்பிரகாசம் மூலம் உரையும்

(புலவர் - மூத்து. கு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்)

புகலரும் அசத்தர் தம்பாற் பொருந்திய அலகை யேபோல்
அகிலமும் உணரும் ஈசன் அருள்உயிர் மேவ லாலே
சகலமும் நிகழ வேண்டும் தலைவன்ஐந் தொழிலும தானே
இகலற இயற்றல் வேண்டும் என்றது நன்றி இன்றே. எசு

என்பது. தம் இயல்பைச் சொல்லற்கரிய வலியில்லாதவரிடத் திற் பொருந்திய பிசாசின் இயல்புகள் அவ்வலியில்லாதவ ரிடத்து நிகழ்வதுபோல, முற்றுணர்வினனாகிய சிவபிரானது திருவருள் ஆன்மாவிற் பொருந்துவதால், அச்சிவபிரானுக் குரிய முற்றுணர்வு முதலிய இயல்பெல்லாம் அவ்வான்மாவி னிடத்தும் நிகழ்வது வேண்டும். அம்முதல்வன் செய்யும் படைப்பு முதலிய ஐந்தொழில்களையும் ஆன்மாவே மாறுபா டறச் செய்வது வேண்டும் என்று சிவசமயவாதிகள் கூறு கின்றார்கள். அக்கூற்று நன்றன்றென்பதாம்.

பேயாற் பிடிக்கப்பட்டவர் தம் இயல்பை வாயாற் சொல்லும் வலியற்றவராயிருந்தும், அவரிடத்திற் பேயினியல்புகள் நிகழ்கின்றன. அவ்வாறே திருவருளாற் கவரப் பெற்றவர் ஏன் அத்திருவருட் செயல் பலவும் உடையாராயில்லை? படைப்பு முதலிய ஐந்தொழிலும் இயற்றுவாராயில்லை? என்பது சிவசமயவாதி ஆசங்கை. இதற்கு மேற் பாட்டிற் சமாதானம் வருமாறுணர்க.

௭௭. இன்றுநோக் குரைநடக்கும்
இயல்பிலோற் கினைய வாய்ந்து
நின்றதோர் அலகை சேர்ந்தால்
நிகழ்வதேன் அதுபோல் உள்ளத்
தோன்றிய உணர்வு தம்பால்
உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன்றொழில் நடாத்தும் மேனி
தனக்கேனக் கோண்டு தானே.

என்பது. பார்வையும் பேச்சும் நடக்கும் இயல்பும் இல்லாத ஒருவனுக்கு இத்தகைய பார்வையும் பேச்சும் நடக்கும் இயல்பும் வாய்ந்துள்ளதொரு பேய் பிடித்தால் இன்றும் யாது நிகழ்வது? (அவன் குருடு ஒழிந்து பார்வை அடைகின்றனனோ? ஊமையாயிராமல் நன்கு பேசுகின்றனனோ? முடமாயிராமல் இனிது நடக்கின்றனனோ? பேய் பிடித்த பின்னரும் பழைய குருடனும் ஊமையனும் முடவனுமாகத் தானே உள்ளான். அவனிடத்தில் குருடும் ஊமையும் முடமுமில்லாத அப்பேயின் இயல்பு வாயாமைக்கு என்னோ காரணம்?) அதுபோல, அவ்வான்மாக்களினிடத்தில் பொருந்திய திருவருள் அவ்வான்மாக்களினிடத்தில் உள்ளதையே விளங்கச் செய்யும். பரமசிவன் தனக்கே யுரியதொரு திருமேனியைக் கொண்டு தனது தொழில் (ஐந்தனையும்) நடாத்துவான் என்பதாம்.

பேயாற் பிடிக்கப்பட்டவன் குருடனும் ஊமையனும் முடவனுமாக இருந்தால், அப்பேய் பிடிமாத்திரத்தால் தனது குருடும் ஊனமும் முடமும் தீரப்பெற்று, அப்பேயினியல்பனைத்தும் உடையவனாதல் இல்லை. அவ்வாறே திருவருளைப் பெற்ற ஆன்மாக்கள் அத்திருவருளின் செயலெல்லாவற்றையும் செய்யும் ஆற்றலைப் பெறவில்லை. நோக்கிலோன், உரையிலோன், நடக்குமியல்பிலோன். இன்றும் நிகழ்வது என்? என்றியைத்துப் பொருள் கொள்க. உள்ளம் ஆன்மா. உள்ளத்து ஒன்றிய உணர்வு ஆன்மாக்களிடத்திற் பொருந்திய திருவருள். தம் ஆன்மாக்கள் தொழில் – ஐந்தொழில்.

ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளைத் தடுத்த பாசத்தை அகற்றி, அம்மூன்றையும் விளக்கிச் சிவத்தைக் காட்டுவதே திருவருள் புரியும் உதவியாகும். அச்சிவபிரான் ஐந்தொழில் புரிதற் பொருட்டுக் கொள்ளுந் திருமேனி அருட்டிரு மேனியாதலின், அதிலிருந்து செய்யும் ஐந்தொழிலும் ஆன்மாக்கள் செய்ய வல்லன அல்ல. ஐந்தொழிற் பயனையே அடையத் தக்கன. ஆன்மாக்களையே திருமேனியாகக் கொண்டு, திருவருள் மேனியைக் கொள்ளாதிருந்தால் ஆன்மாக்களும் சிவபிரானைப் போலப் பஞ்சகிருத்திய கருத்தாக்களாகலாம். அவ்வாறில்லாமையை,

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தரும்அருள் உபாங்கம் எல்லாம் தான்அருள் தனக்கொன் றின்றி
அருள்உரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே

என்றதால் (சித்தியார். (67) அறிக.

உள்ளம், உணர்வு, ஈசன் என்று மூன்று பொருள் இதிற் கூறப்பட்டமையும், உள்ளத்தில் உணர்வும், உணர்வில் ஈசனும் ஒன்றுதலும், உள்ளத்திற்கும் ஈசனுக்கும் இடையில் உணர்வாகிய அருட்டிருமேனி இருத்தலும், அதனால் அத்திருவருள் மேனியிலிருந்து ஐந்தொழில் புரியும் ஈசன் செயல் உள்ளத்திற்கு (ஆன்மாவிற்கும்) வேண்டுமென்பது அடாது எனச் சிவசமவாதிகளை மறுத்தவாறறிக. இவ்விரு பாட்டும் இடைப் பிறவரல் போன்று ஓராசங்கையை நீக்கியன.

௭௮. இந்நிலை தன்னில் மன்னி எய்திடுங் கலாதி போதம்
தன்னள வழிந்து நிற்கும் தகவிலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணம் ஆகா வகைஅதில் அறிவ டங்கி
மன்னிட வியாபி ஆய வான்பயன் தோன்றும் அன்றே.

என்பது. இச்சகலாவத்தையில் ஆன்மாவில் நிலைபெற்றுச் சார்ந்திடும் கலையாதி தத்துவங்களால் உறும் ஏகதேச ஞானம் தனதளவின் மிகாது தன்னுட் பட்டவற்றை அறிந்துநிற்கும். 'முன்னைத் தகவி(ல்)லா மலங்கள் வாட்டிய' (௭௫) அச்சுத்தாவத்தை நிலையில், அருளைக் கருவியாக்கொள்ளாதவகை நின்று, அத்திருவருட் கடலுள் ஆன்மா அடங்கி நிலைபெற்றால், வியாபக ஞானமாகிய மேலான பயன் அப்பொழுதே தோன்றும் என்பதாம்.

இத்திருவிருத்தத்துள் இரண்டு வாக்கியங்கள் உள. ஒன்று, 'இந்நிலை...நிற்கும்' என்பது. மற்றொன்று 'தகவிலா மலங்கள் நீத்த அந்நிலை...தோன்றும் அன்றே' என்பது. முதல் வாக்கியத்துள் இகரச்சுட்டு ஆன்மாவின் அணிமைத்தான சகலாவத்தையையும், இரண்டாவது வாக்கியத்துள் அகரச்சுட்டு சேய்மைத்தான சுத்தாவத்தையையும் சுட்டின. சகலாவத்தையுட் கலை முதலிய தத்துவங்களின் சேர்க்கையால் உண்டாகும் ஏகதேச ஞானம் ஒரு வரையறையுட் படுவது. மல சம்பந்தம் நீங்காதது. சுத்தாவத்தையுட் கரணாதீதமாய் அருள் வெளியில் நின்று பாமே பார்த்திருக்கும் பிராயிக ஞானம் (முற்றுணர்வு) வரையறையில்லாதது. வியாபக ஞானம் மலரகிதமானது. இன்பத் துன்பக் கலப்பில்லாதது. அதுவே பதார்த்தக் காட்சியற்ற ஆன்மாவிற்குப் பேரின்பப் பயனாகும். அதனினும் மேலாம் பயன் யாதுமின்மையின் 'வான்பயன்' எனப்பட்டது. காணமாகாவகை அதில் அறிவடங்கி மன்னுதல் என்பதில் இரண்டுண்மைகள் உள. ஒன்று, காணமாகா வகை மன்னுதல், மற்றொன்று அதில் அறிவு அடங்கி மன்னுதல். அவற்றுள், முதலாவது தான் பணி நீத்தல் (இறைபணி நிற்றல்). இரண்டாவது ஏகனாதல். இவ்வேகனாகி இறைபணி நின்றாலன்றி வியாபியாய வான்பயன் எய்துவதில்லை. ஏன்? தக



விலாமலங்கள் நீங்கமாட்டா. நீங்காமையால், 'யான்' என்னும் அகந்தையும் 'எனது' என்னும் மமதையும் அகலா. 'யான்' 'எனது' என்னுஞ் செருக்கற்றால் இறைவன் உடனாய் நின்று கொள்வன். கொள்ளவே வினை நுகர்ச்சியும் (கர்மாநுபவமும்) ஆர்ச்சிப்பும் (கர்மசப்பாத்தியமும்) இல்லா தொழியும். ஒழியவே, அப்பிராரத்த வினையும் ஆகாமிய வினையுமல்லாத ஏனைச் சஞ்சிதவினையும் மாயையும் ஆணவமுமாகிய முக்குற்றமும் அகலும். இத்துணை நலமுடைய அவ்விரு செருக்கும் அறுதற்கு 'அவன் இவனாய் நின்ற முறை ஏகனாகி நிற்கும் ஞானம் ஒன்றே உரியது பிறிதில்லை. தன் பணி மடங்கினாலன்றி வினைத்தொடக்கு (கர்மபந்தம்) அடைதற்கு ஏதுவாய் இந்திரியங்களின் வழிப்பட்டுச் செலலும் பாதந்திரம் நீங்காது. அது நீங்கத்தான் பணியை நீத்தலும் இறைபணி நிற்றலும் ஒருதலையான் வேண்டும். மலநீக்கம் சிவப்பேறு இரண்டும் இதிற் குறிக்கப்பட்டமை அறிக.

அன்றே தோன்றும் என மாற்றாது, அன்று, ஏ இரண்டும் அசையாக்கலுமுண்டு.

இதில், 'தோன்றும்' என்றது பற்றிய ஓராசங்கையும் அதற்குச் சமாதானமும் மேற்கூறப்படுகின்றன.

௭௯. அடைபவர் சிவமே ஆகும் அது
அன்றித் தோன்றும் என்ற
கடனதேன் என்னின் முன்னும்
கண்டிடார் தம்மைப் பின்னும்
தோடர்வரும் அருளி னாலும்
தோன்றுமா காணார் ஆயின்
உடையவ னடிசேர் ஞானம்
உணர்தல்இன் றணைதல் இன்றே.

என்பது. (௭௮) மேற்பாட்டில், 'வான்பயன் தோன்றும்' என்றது எவ்வாறு முறையாகும்? திருவருளை அடைபவர் சிவமே ஆவர். அதைவிட்டுத் 'தோன்றும்' என்றதால் திருவடிஞானம் அன்றோ நிலைக்கும்? என்று ஆசங்கை செய்

தால், தம்மை அத்திருவருட் பேற்றுக்கு முன்னரும் கண்டிடாதார் அதற்குப் பின்னரும் தொடர்ந்து பற்றுதற்( அரிய திருவருட் டுணையாலும் தோன்றுமாறு (தம்மைக்) காணாராகில், சுவாமியின் திருவடியடையும் ஞானத்தை உணர்தலும் இல்லை ; அணைதலும் இல்லை என்பதாம்.

கடனது - முறைமையானது, என் என்னின் - யாதென்றால், ‘ கடனதே தென்னின் ’ என்றும் பாடமுண்டு. முன்னம் என்ற பாடம் பொருந்தாது. பெத்த நிலையை ‘ முன்னும் ’ என்றும் முத்தி நிலையைப் ‘ பின்னும் ’ என்றும் எதிரதும் இறந்ததும் தழுவும் எச்சவும்மையை முறையே கொடுத்துணர்த்தி யருளினார் ஆசிரியர். தோன்றும் ஆறு என்பது குறைந்து நின்றது.

அவனருளே கண்ணாகக் காணத்தக்கது ஆன்மாவாதலின், தன்னைத்தான் அறியாத ஆன்மா அருட்கண்ணால் இன்புருவைக் காண்டல் எவ்வாறு கூடும் ? பெத்தத்தில் மலச்சார்பால் தன்னையறியா தொழிந்தது. முத்தியிலும் அருட்சார்பால் தன்னை அறிந்திலதாயின், அருளை அறிதல் ஏது ? அடைதல் ஏது ? என்னை யான் அறியாத நிலையில், பிறிதொன்றனை அறிதல் அணைதல் இயலாதன்றோ ? இவ்வுண்மையை இத்திருப்பாடல் இனிது விளக்கிற்று.

‘ அடைபவர்...என்னின் ’ என்பது ஆசங்கை. முன்னுங் கண்டிடார்...அணைதலின்று ’ என்பது சமாதானம்,

‘ உடையவள் அடிசேர் ஞானம் ’ சைவ சித்தாந்த நெறிக்கே உரியது. இனி, முன்கூறிய ‘ வான் பயன் ’ தோன்றக் காரணமாகா வகை அருளிலடங்கி மன்னும் முறைமை யுணர்த்துகின்றார்.

பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவி லாமைச்
சொற்பெறும் அதீதம் வந்து தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச் செயல்அறுத் திடஉ திக்குந்
தற்பரம் ஆகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே. ௨0

என்பது, சகலாவத்தையும் கேவலாதீதமும் தோன்றிப் புணராதவாறு வியாபியாய வான் பயனாய்த் தோன்றி நின்ற



சிற்பரம் பொருளால் தான் பணிநீத்து இறைபணி நின்றிடத் தற்பரம் உதிக்கும். அவ்வாறு உதித்த தற்பரமாகி நிற்றல் சாக்கிராதீதம் என்பதாம்.

1. பொற்புறு கருவியாவும் புணராமை கேவலாவத்தை நீக்கம் சகலாவத்தை ஆக்கம் இரண்டும் இரவினீக்கமும் பகலில் ஆக்கமும் ஒக்கும். இரண்டு அவத்தையும் உயிர்கட் குறுவன. இரவும் பகலும் கண்ணுக் குறுதல் போலும். இரவில் இருளிற் கிடந்த கண்ணுக்குப் பகல் வரவால் அழகுமிக்க பல பொருட்காட்சி எய்துவதுபோல, கேவலாவத்தையில் ஆணவத்திற் கிடந்த உயிர்க்குச் சகலாவத்தையால் அழகுமிக்க தனுகரணபுவன போகம் பலவும் எய்துகின்றன. இந்நிலை முன்னிலையாகிய கேவலாவத்தையை நோக்க நன்னிலையாயினும், தொன்னிலையாகிய சுத்தாவத்தையைநோக்க உயிர்க்குத் தீநிலையேயாகும். ஆதலின், ‘ பொற்புரு கருவி யாவும் புணராமே தோன்றிநின்ற சிற்பரம் ’ எனப்பட்டது.

2. அறிவிலாமைச் சொற்பெறும் அதீதம் வந்துதோன்றாமை : இது கேவலாவத்தையைக் குறித்தது. சகலத்தின் முன்னதே கேவலாவத்தையாயினும், சகலாவத்தை நீக்கத்தில் சுத்தாவத்தையே எய்தற்பாலது என்ற நியதியின்மையின், சகலந் தீர்ந்ததும் கேவலம் வந்துதலைப்படுதல் உயிர்க்கு நாடோறும் நிகழக் காண்கின்றோம். கேவலமும் சகலமும் மாறி மாறி நிகழ்கின்றன. அதனால், சகலம் நீங்கியதும் கேவலம் வந்து தலைப்படாது விழிப்புடன் போற்றற்பாலர் வீடுபெற நிற்போர். சகலத்திற்குப் புணர்தலும் கேவலத்திற்குத் தோன்றுதலும் என்ற தொழிலைக் குறித்த ஆசிரியர் திறம் உணர்ந்து போற்றத்தக்கது. உயிர்கட்குச் சகலத்திற் கருவிகள் பல வந்து புணர்கின்றன. கேவலத்தில் இருளாகிய ஆணவம் ஒன்றே சுற்று முற்றுந் தோன்றுகின்றது. அத்தோற்றமும் விசித்திரமானது.

“ ஒருபொருளுங் காட்டா திருள்உருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா திது. ”

“ பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்குண் டென்றும்
கணவர்க்கும் தோன்றாத கற்பு ”

'அறிவில்லாமை' என்ற சொல்லைப் பெறும் அவத்தை கேவலம் ஆகும்.

3. தோன்றி நின்ற சிற்பரம்: சகலமும் கேவலமும் தோன்றாதவாறு நின்று ஒளிரும் ஞானசக்தி, சித்-ஞானம், பரம் - மெய், சிற்பரம் - மெய்யுணர்வு சிவஞானம், சத்திய ஞானம் இம்மெய்யுணர்வு கருவிச் சேர்க்கையுள்ள சகலத்திலும் அறிவில்லாமையைத் தோற்றும் கேவலத்திலும் தோன்றாது. சகல கேவலமிரண்டிற்கும் பரம் (மேல்) ஆதலின் சிற்பரம் என்றார் எனலும் பொருந்தும். 'உணர்வாய் நின்ற ஞானக்கூத்தன்' கேவல சகலம் நிகழாவாறு நிறுத்தி மலம் அறுக்கும்? (40).

4. சிற்பரமதனால் உள்ளச் செயலறுத்தல் - சிவஞானத்தால் ஆன்மா, தான் பணிநீத்து ஏகனாகி இறைபணி நிற்றல். உள்ளம் - ஆன்மா. செயல் - சேட்டை. உள்ளச் செயல் - தற்போதச் சேட்டை. உள்ளம் ஆன்மாவையும் ஆன்மபோதத்தையும் உணர்த்துமிடம் பலவுள. "உள்ள மதியுங் கெடில் உமைகோன் கேதமற வந்தளிக்கும்" என்ற திருக்களிற்றினால் உள்ளம் ஆன்மா என்பது விளங்கும். 'அவன் உளமாகில்லான்' என்ற சிவஞான போதவெண்பாவாலும் அறிக. 'கட்டாய உள்ளத்தைக் கண்காணு' என்றதும் அதிலேயே, 'நானவ னென்றெண்ணினர்க்கு நாடுமுளம் உண்டாதல்' என்றதில் ஆன்மபோதம் என்ற பொருளுணர்த்துவதறிக.

5. உள்ளச் செயலறுத்திட வுதிக்குந் தற்பரம் - தற்பரம் - தனக்குப் பரம். தத்-அச்சித்து அது (சிற்பரம்) தற்பரம் - அச்சிற்பரத்துக்கும் பரம். அஃதாவது ஞானாதீதப் பொருள். சிற்பரம் - வகரம். சிற்பரத்துப் பரம் - சிகரம். "சிற்பரமாம் அம்பரமாந் திருச்சிற்றம்பலம் போற்றி" என்றருளிய ஆசிரியர் திருவாக்காலறிக. (கோயிற் புராணத்துதி). தன் என்றது ஆன்மாவை யுணர்த்து மிடமுமுண்டு. ஈண்டுப் பொருந்தாது. 'தன்னானந்தக் கொடி' என்றதில், சிவத்தை யுணர்த்துதலுங் காண்க. 'தம்பிரான்' என்புழித் 'தம்' என்பது ஆன்மாக்களைக் குறிக்கும்.



"நான் செய்தேன் எனும் அவர்க்குத்தான் அங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்" ஆதலின், உள்ளச் செயலறுத்தாலன்றித் தற்பரம் உதியாது. "ஊன்செய்யா ஞானம் உதிப்பினல்லால் ஒருவருக்கும் 'யான்' 'எனது' இங்கு ஒழியாது." ஆதலின், சிற்பரமதனால் உள்ளச் செயலறுத்திடுக என்றார்.

6. தற்பரமாகி நிற்றல் - அநந்நியமாயிருத்தல், "அறிவிக்கப்படுஞ் சித்தும் இவன்றான். அவன் தானே அறியுஞ் சித்து. ஆதலினால் இரண்டும் அணைந்தாலும் ஒன்றாகாது அநந்நியமாய் இருக்கும்" (சித்தியார். 320) "இவனைத் தானாக்கி அரும்பித் தீ இந்தனத்தை அனலழிப்பதுபோல் மலத்தை அறுத்து அமலன் அப்பணைந்த உப்பேபோல் அணைந்து விரும்பிப் பொன்னினைக் குளிகை ஒளிப்பது போல் அடக்கி, மேளித்துத்தான் எல்லாம் வேதிப்பானாகிக் 'கரும்பைத் - தேனைப் - பாலைக் - கனியமுதைக் - கண்டைக் கட்டியை ஒத்திருப்பன் அந்த முத்தியினிற் கலந்தே" (ஷை. 321), "அறிபவன் அருளினாலே அநந்நியமாகக் காண்பன்" (245), அந்நிய மிலாமையான் (246), 'அறிவின் உள்ளேஎன்றும்நின்றிடுதலாலேஇவன் அவன் என்னலாமே' (248) என்பவற்றைநோக்கி இம்முத்தி முடிவை யுணர்க.

7. சாக்கிராதீதம் - கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றவத்தையுள் இரண்டதீதம் உண்டு. ஒவ்வொன்றுள்ளும் அதீதம் கூறுவதுண்டேனும் இங்குக்கொள்ளற்பாலன இரண்டே. அவை எண்ணவொன்றிலாததீதம் ஒன்றும் 'சாத்திராதீதம்' ஒன்றுமாம். (பா. 60, 62. பார்.) முதலாவது 'நீக்கமிலதீதம் மாசு நிறைந்த கேவலமாம் நீர்மை' (62), 'தனியதீதம் உண்மை உயிர்க்கு' (52) என உணர்த்த நின்றது. இரண்டாவது "ஊக்கமில் இரண்டும் கூடாதொழிய ஓர்நிலையில் நீடுஞ்சாக்கிராதீதம் சுத்தத் தகைமையதாகும்", "பொற்புறு...நிற்றல் சாக்கிராதீதம்" என உணர்த்த நின்றது. இவ்வவத்தையின் பேதங்களாகிய காரணம் காரியம் என்பவற்றையும் அவற்றின் உட்பிரிவுகளையும் உபதேச வாயிலான் அறிதல் வேண்டும்.

# சேர் பொன்னம்பலம் இராமநாதன்*

(சேர் கந்தையா வைத்தியநாதன்)

இன்று சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய சிரார்த்த தினமாகும். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவர் பெருமானின் பொய்யா மொழியின்படி மன்னர் மன்னரும் மதிக்கும் புகழ்பெற்று எங்கள் இரத்தினத் தீவாகிய ஈழ நாட்டில், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியார்களில், சேர் பொன்னம்பலம் இராமநாதனவர்கள் தலைசிறந்தவராவர். இப்பெரியார் இலங்கை மக்களின் நல்வாழ்வுக்ாகப் பரம்பரை பரம்பரையாக அருந்தொண்டாற்றிவரும் பிரபல குடும்பத்தில் 1851-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி புதன்கிழமை அவதரித்தார்கள். ஆங்கிலேயர் அரசாட்சியில் இவரின் முன்னோர்களுக்கு அதிக செல்வாக்கும் சிறப்பும் இருந்தன.

இவருடைய தந்தையாரான பொன்னம்பல முதலியார் பலவகையான தருமங்களைச் செய்திருக்கின்றார்கள். தம்முடைய பெயரால் கொழும்புமா நகரில் 1857-ம் ஆண்டு பொன்னம்பல வாணேசர் கோயிலை எடுப்பித்தார்கள். பல மடாலயங்களைக் கட்டுவித்தார்கள். சேர் இராமநாதனின் பாட்டியார் (சேர் முத்துக்குமாரசாமியின் தாயார்) தாம் செய்த நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு, வாகன வசதி, ரோட்டு வசதியில்லாத அந்தக்காலத்தில், காட்டு மார்க்கமாகக் கதிர்காமத்திற்குக் கால் நடையாகச் சென்று மீண்டார்கள். இவரின் தந்தையார் இந்தியாவிலுள்ள சிவஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டதுமல்லாமல், பொருள் வருவாய் குறைந்த இனத்தவர்களுக்கும் அப்படி வழிபட்டு பலனடையும் வண்ணம் உதவி செய்தார்கள். இராமநாதனின் முன்னவனின் பெயர் குமாரசாமி ; அருணாசலம் பின்னவனாகும்.

---

*கொழும்பு வானொலியில். இராமநாதனின் சிரார்த்த தினமாகிய 23-11-52-ல் பேசியது.



இவர் இளமையிலேயே அரச பாடையாகிய ஆங்கிலத்
தையும், வட மொழியையும், செந்தமிழையும் நன்கு கற்றார்
கள். அதனுடன் அமையாது சிங்களம், லத்தின், கிரீக்,
பாலி முதலிய பாடைகளையும் வருந்திக் கற்றார்கள். அதன்
பின் இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில்
தேறித் தமது 22ம் வயதில் யாவரும் அதிசயிக்கும் வண்ணம்
பெரிய நியாய துரந்தரரானார். அதனால் பெருங்கீர்த்தியை
யும் பொருளையும் ஈட்டினார். இப்படித் திறமையுடன் தமது
வாழ்வை நடாத்தும் காலத்தில், அப்பொழுது சட்ட நிரு
பண சபையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவிருந்த
இவரின் தாய் மாமனாரான சேர் முத்துக்குமாரசாமி அவர்
கள் 1879-ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி திடீரென
இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்த இடத்திற்கு இளம்
வாலிபராயிருந்த இராமநாதனும், பிறிற்றோ என்னும் ஒரு
வரும் போட்டி போட்டார்கள். ஆனால் தமிழ் மொழிக்
கும், சைவத்திற்கும் தமது உடல், பொருள், ஆவி என்னும்
மூன்றையும் அர்ப்பணஞ் செய்தவராகிய ஆறுமுக நாவலர்
பெருமான், சட்ட நிரூபண சபைக்கு இராமநாதனே தகுந்த
வரென நிச்சயித்து, தம்மைப் பீடித்த தொய்வு நோயையும்
பொருட்படுத்தாது, பெருங்கிளர்ச்சி செய்து, இராமநாத
னையே நியமிக்கும்படி செய்துவைத்தார்கள். இது நிகழ்ந்த
ஆறுமாத காலவெல்லைக்குள், அதாவது 1870-ம் ஆண்டு
கார்த்திகை மாதம், நாவலர் பெருமான் ஈசன் மலர்ப்பதத்
தைச் சேர்ந்தார். சிவனடியே சிந்திக்கும் சிவஞானிகளாகிய
நாவலரும், இராமநாதனும், எல்லாம்வல்ல பரமேசுவரனுக்
குகந்த கார்த்திகை மாதத்தில் சிவபதமடைந்தார்கள்
என்பது இங்கு குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இவர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகச் சட்ட
நிரூபண சபையில் 1879 முதல் 1892-ம் ஆண்டுவரை அருந்
தொண்டாற்றினார். அவர் சட்ட நிரூபண சபையில் இக்
காலத்திலும் அதன் பின்னும் ஆற்றிய சொற்பொழிவுகள்
நீங்கள் ஒவ்வொருவரும் வாசித்து [illegible] உரியன.
இவர் கவுன்சிலில் 50 ஆண்டுகளாகத் தொண்டு செய்திருப்

186886

பதை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் உலோகோபகாரமாகச் செய்த தொண்டுகளை இப்பொழுது எடுத்துக்கூறுதல் முடியாதெனினும் ஒரு சிலவற்றை இங்குக் கூறுவாம். யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப்பாதை திறந்து புகையிரதம் ஓடச் செய்தல். தபாற்கந்தோர், சேமவங்கி, சட்டக்கல்லூரி நிறுவுதல். யாழ்ப்பாணத்திலுள்ள பொன்னாலையிலிருந்து காரைதீவிற்குப் (தற்பொழுது காரை நகர்) பாலம் போடுதல். 1915-ம் ஆண்டு நடந்த தேசக் கலகத்தில் சிங்கள மக்கள் பட்ட துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதிச் சிங்கள மக்களுக்கு அவர் ஆற்றிய தொண்டு அவர்கள் ஒருபோதும் மறக்கப்போவதல்ல. இஸ்லாம் மக்களுக்கும் அவர் பல வழியிலும் தொண்டாற்றியிருக்கின்றார்கள்.

இவர் எமது இலங்காபுரி அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலையடையும் பொருட்டுப் பல்வாற்றானும் முயன்றார். சேர் ஜேம்ஸ் பீரீஸ், லோரன்ஸ், சேர் செரூட், விஜயக்கோன், இ. டபிள்யூ. பெறிரு, எவ். ஆர். சேனநாயகா, பாலசிங்கம், சேர் பரன் ஜயதிலகா, சேர் அருணாசலம், மகாகனம் டி. எஸ். சேனநாயகா முதலிய மேதாவிகளுடன் சேர்ந்து எமது நாட்டின் விடுதலைக்காக உழைத்தார்.

தென்னிந்தியாவிலே செட்டிநாட்டரசர், சேர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் எவ்வளவு தாராளமான சிந்தையுடன், சிதம்பரத்திலே, 1929-ஆம் ஆண்டில் அண்ணாமலைச் சர்வகலாசாலையை அமைத்து, அங்கே பயிலும் மாணவர்களுக்குப் பலவகையான சாஸ்திரங்களையும், தமிழிசையையும் கற்பிக்கச் செய்தார்கள். அதுபோல இலங்கையில் சேர் இராமநாதனவர்களும் 1913-ம் ஆண்டில் சைவப் பெண்களுக்கு இராமநாதன் கல்லூரி என்ற பெயரால் ஓர் விடுதிப் பெண்பாடசாலையைச் சுன்னாகத்தில் நிறுவினார்கள். அங்கே படிக்கும் பெண்பிள்ளைகள், சைவாசார ஒழுக்க விதிகளுக்கு அமைந்து நடப்பதை இன்றும் காணலாம். இக்கல்லூரி இல்லாவிடில் எங்கள் சைவப் பெண்பிள்ளைகளின் நிலைமை எப்படியிருக்குமென்று உங்களுக்கு நான் கூறவேண்டியதில்லை. அதுவுமன்றிச் சைவமாணவர்கள் கல்வி கற்கும்



பொருட்டு 1919-ம் ஆண்டு திருநெல்வேலியில் பரமேசுவரக் கல்லூரியை ஸ்தாபித்தார்கள். கொழும்புமா நகரில் அவரின் தந்தையார் கட்டுவித்த சிவாலயமாகிய பொன்னம்பலவாணேசர் கோவிலை, திராவிட சிற்ப முறைப்படி, கருங்கல்லினால் புதுக்குவித்தார்கள்.

சிவபெருமானைச் சாமகானப்பிரியனென்று எல்லோருங் கூறுவர். எங்கள் இராமநாதன் பொதுவாகச் சங்கீதத்திலும், சிறப்பாகத் தமிழிசையிலும் மிக்க பிரீதியுள்ளவர். இவருக்கு வயலின் வாசிப்பதில் அதிக விருப்பமுண்டு. “அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்” என்ற தாயுமானவர் பாடலிலும், “சாட்டூர்க் கடலே கடம்பூர் மலையே” என்ற தேவாரத்திலும், “மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்தமுதே” என்ற திருவாசகத்திலும், “முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை” என்ற திருவாசகத்திலும் இவருக்கு மிக்க விருப்புண்டு.

கேட்டார்பிணிக்குந் தகையதாய இவரது நாவன்மையை, இவரது விரோதிகளும் வியந்து பாராட்டுவர். இலங்கையின் பல பாகங்களிலும், இந்தியாவிலும், மலேயாவிலும், ஐரோப்பாக் கண்டத்திலும் இவர் சென்று பலர் இறும்பூதுறும் வண்ணம் சொற்பொழிவாற்றியிருக்கின்றார்கள். இந்தியச் சிங்கமாகிய சுவாமி விவேகானந்தா, அமெரிக்கா சென்று வீர கர்ச்சனை செய்து எப்படி இந்து சமய உண்மைகளைப் பரப்பினாரோ, அதுபோலவே இராமநாதனவர்களும் 1905-6 ஆண்டில் அமெரிக்க மக்களின் வேண்டுகோட்கிணங்கி அமெரிக்காச் சென்று அங்குள்ள தலைசிறந்த சர்வகலாசாலைகளிலும், பல பேரறிஞர்களை உறுப்பினராகக் கொண்ட சபைகளிலும், சமயம், இந்திய தத்துவ ஞானம், பண்பாடு, என்னுந் துறைகளிற் பிரசங்கங்கள் செய்து, அவர்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் பெருமையையும் பண்பாட்டையும் அமெரிக்க நாட்டவர் அறியும்படி செய்த இப் பேரறிஞர்க்கு யாம் செய்யும்

கைம்மாறென்னே ? இராமநாதன் அமெரிக்காவில் ஆற்றிய பிரசங்கங்களின் ஓர் பகுதி “The culture of the souls among the western nations” என்று நூல் வடிவில் வந்திருக்கிறது.

சென்ற 45-வருடங்களாகச் சென்னைச் சைவசித்தாந்த சமாஜமானது, சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் - பிரித்தானிய கிறிஸ்தவ வேதாகம சங்கத்தைப் போல - அச்சிட்டு மிக எளிய விலையில் எல்லோருக்கும் உபகாரஞ் செய்துவருகின்றது. இராமநாதனின் சைவப்பற்றை உணர்ந்த இந்தியப் பெரியார்கள், அவரைச் சமாஜத்தின் முதலாம் ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்கி நடத்துமாறு வேண்டினார்கள். அப்படியே இராமநாதனவர்கள், சிதம்பர க்ஷேத்திரத்தில் 1906-ம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28ந்-தேதிகளில் நடந்த முதலாண்டு விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகள் வரையில் சமாஜத்தின் காரியதரிசியாகவும், பின் தலைவராகவும் அரும்பணி செய்த திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள், மறுபடியும், சென்னைமா நகரில் 1922-ம் ஆண்டு நடந்த சமாஜ ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்து நடத்தும்படி ஓர் விண்ணப்பத்தைச் சேர் இராமநாதனுக்கு விடுத்தார்கள். சேர் இராமநாதன் அதனை அன்புடன் ஏற்றுச் சென்னைமா நகரம் சென்று தலைமை தாங்கி அவ்விழாவை இனிது முற்றுவித்தார்கள். அண்ணாமலைச் சர்வகலாசாலையின் ஸ்தாபகராகிய ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்கு, கொழும்புமா நகரில் அவர் செய்த செயற்கருஞ் சேவைக்கு நன்றியறிவு தெரிவிக்கும் முகமாக, 1929-ஆண்டு மே மாதம் 5ந் திகதி ஓர் பாராட்டுக் கூட்டம் நடந்தது. அதற்கு, சேர் இராமநாதனவர்களே தலைமை பூண்டு அவரைப் பாராட்டி வாழ்த்தினார்கள்.

இவர் ஞானாசிரியர், போதகாசிரியருமாய் இருந்ததுயன்றிச் சிறந்த நூல்களையும் ஆக்கியிருக்கின்றார்கள். அவைகளை எடுத்துக்கூற விரியும். இவர் “மத்தேயு” என்ற



கிறிஸ்தவ சுவிசேஷத்திற்கு ஆங்கிலத்தில் உரை எழுதி அதனை 1898-ம் ஆண்டு வெளியிட்டார். அதனைக் கிறிஸ்தவ உலகம் நன்றாய் வரவேற்றது. அதனால் களிப்படைந்த இராமநாதன், “யோவான்” எழுதிய சுவிசேஷத்துக்கு விசேடவுரையை 1902-ம் ஆண்டில் வெளியிட்டார்கள். “மத்தேயுவிற்கும்,” “யோவானுக்கும்” இவர் எழுதிய உரைகளைப் பதிப்பித்தவர், இவரின் முன்னைய சீடரும், தர்மபத்தினியுமாகிய லீலாவதி அம்மையாரவர்களே. இந்த அம்மையார் ஆங்கிலத்திலே, (1) Western Pictures for Eastern Students (2) The Ramayana என்ற இரு நூல்களையும் எழுதியுள்ளார். லீலாவதி இராமநாதன் அம்மையார் கல்விக்குச் செய்த தொண்டை உணர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தை 1942-ம் ஆண்டு வழங்கினார்கள். சேர் இராமநாதனவர்கள், பரமேசுவரக் கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும், சிறந்த நூல் நிலையங்களை அமைத்து வைத்திருக்கின்றார்கள்.

இராமநாதன் எந்தக் காரியத்தில் வெற்றிபெற்றாலும், ஏது வந்தாலும், இது பரமேசுவரன் கொடுத்தது என்று கூறுவது வழக்கம். ‘திரிகரணசுத்தி காரிய சித்தி’ என்ற வாக்கியத்தை அவருடைய இரு கல்லூரிகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளிலும், மலர்களிலும் யாம் காணலாம். “யான் அனுபவிக்கும் அதிகாரம் நின்னுடையதே!” “யான் அனுபவிக்கும் கீர்த்தி நின்னுடையதே!” என்று எதையும் எல்லாம் வல்ல பரமேசுவரனுக்கு அவர் திரிகரண சுத்தியுடன் அர்ப்பணஞ் செய்வது வழக்கம்.

சகலகலா விற்பன்னரும், தத்துவ ஞானியும், அரசியல் ஞானியும், சட்டவாதியும், பட்டவர்த்தனர் பரவும் பெருமையுடையவருமாகிய சேர் பொன்னம்பலம் இராமநாதனவர்கள் 1930-ம் ஆண்டு கார்த்திகை மாதம் திருவோண நட்சத்திரத்தன்று சிவனடி நீழலெய்தினார்கள். அவரது உருவச்சிலை 1942-ம் ஆண்டு பாராளுமன்ற மைதானத்தில், இலங்கை மக்களால் நிறுவப்பெற்றது. சென்ற வருடத்தில் இவரின்

நூற்றாண்டு விழா கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டது. கொழும்புச் சிவன் கோவிலிலும், யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியிலும் நடந்த கொண்டாட்டத்தில் பங்குபற்றி மகிழும் பேறு எனக்குக் கிடைத்தது. இப்பெரியாரைப்பற்றிய ஓர் சாற்றுக்கவியைக் கூறி, எனது பேச்சை முடிக்கின்றேன்.

“ தரும உருவாய் அறிஞர் தமக்கெல்லாம் நாயகமாய்
பிரபு சிகாமணியாகிப் பிறையணிந்த பெருமானூர்
அருள் பரவு சிவானந்த அனுபூதிப் பெருவாழ்வாய்த்
தருமருவு தமிழ் நாட்டார் தவஞ்செய்த தவமானோன்.”

---

# சமாஜ மாதாந்திரக் கூட்டம்

(சு. இளவழகன், D. Com., சமாஜத் துணைச்செயலாளன்)

27-12-52 அன்று மாலை 5 மணிக்கு நமது சமாஜச் சார்பில் சென்னைப் பூக்கடை மல்லீச்சுவரன் திருக்கோயிலில் சமாஜத் தலைவர் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்களின் தலைமையின்கீழ் சமாஜ உறுப்பினர் கூட்டமும், மாதாந்தரக் கூட்டமும் நடைபெற்றன. உறுப்பினர் கூட்டத்தில் மற்றோர் இடத்தில் தனியே தரப்பட்டுள்ள தீர்மானங்கள் நிறைவேறின. திரு வ. ஆ. தேவசேனாதிபதி, எம். ஏ., பி. எச். டி. அவர்கள், தத்துவத் துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, ‘ நால்வரும் நாமும் ’ என்னும் பொருள் பற்றியும், புலவர் முருகவேள், பி. ஓ. எல். அவர்கள் “ காமம் சான்ற ஞானப்பநுவல் ” எனும் பொருள் பற்றியும் மாதாந்தரக் கூட்டத்தில் மிகவும் அழகாக ஆராய்ச்சித் திறம் பொலியவும் பேசினார்கள்.

## தலைவர் பேருரையின் சுருக்கம்

**சிவநேயச் செல்வர்களே !**

சிலர் பேரறிஞர்களாக இருந்தாலும், எவ்வளவு படித்திருந்தாலும் பதுங்கி ஒதுங்கியே வாழ விழைகின்றார்கள்.



தம்மை வெளிக்குக் காட்டிக்கொள்வதில்லை. அப்படிப்பட்டவர்களில், இப்பொழுது பேச ஒப்புக்கொண்ட திரு. தேவசேனாபதி அவர்களும் ஒருவர். இப்படிப்பட்டவர்களை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டியது நம் கடமை. நீங்களும் இதை ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இப்பெரியார் “ தத்துவத் ” (Philosophy) துறையில் இடைவிடாது பேருழைப் பெடுத்து ஆராய்ந்து வருகின்றார். இத்துறையில் இவர் மிகவும் வல்லவர். இவரைப்போல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் அரிதின் முயன்று வேலை செய்ய முற்பட்டால் நாட்டிற்குப் பெருநலம் விளையும் என்பது ஒருதலை. இவர் சித்தியார் அறுவர் உரையை மிகவும் நுணுகிப் படித்தவர்.

இவர் எடுத்துக்கொண்ட பொருள் “நால்வரும் நாமும்” என்பது. இது மிகவும் பொருள் பொதிந்த தலைப்பு. நால்வரே நம் சமயத்திற்கு வழிகாட்டிகள். அப்படிப்பட்டவர்களின் அருள் நலத்தோடு நம்மையும் தொடர்புப் படுத்தி இங்குப் பேசுதல் மிகவும் சால்புடைத்தே. இதுபற்றி நாம் பேசுவதைவிட அவர்தம் ஆராய்ச்சிக் கருத்துக்களோடு பேச, அதை நாம் கேட்பதே மிகவும் பொருத்த முடைத்தாம்.

## நால்வரும் நாமும்—தேவசேனாதிபதி, M.A., Ph.D.

**அன்பு சான்ற தலைவர் அவர்களே ! பெரியோர்களே !**

சொற்பொழி வாற்றவேண்டும் என்று யான் முனைவதில்லை. இன்று தலைவரின் ஆணைக் கிணங்கவே இவ்விடம் சொற்பொழிவாற்ற ஒத்துக்கொண்டேன். காய் பழுத்த பின்னரே வெளியில் வருதல் வேண்டும் என்ற எண்ணமுடையவன் நான்; எடுத்துக்கொண்ட பொருள் “நால்வரும் நாமும் ” என்பது.

நால்வர் என்பது இருவேறு நால்வரைக் குறிக்கலாம். அதாவது சமயாசிரியர் நால்வரும் சந்தானாசிரியர் நால்வரும் ஆகும். சந்தானாசிரியர்கள் பதி, பசு, பாசம் என்ற மூன்றைப் பற்றி விளக்கிப் போந்தனர். கொள்கைகளை வரையறுத்தனர். சமயாசிரியர்கள் திருவருள்,

உணர்வு பற்றியே மிகுதியாகப் பேசினார்கள். அதன் திறம் பற்றியே பற்பல வழியில் விளக்கிப் பாடினார்கள். தலைவனாகிய பேர் உயிர் இல்லை என்றால் சிற்றுயிர்களாகிய நாம் இல்லை. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு" என்று வள்ளுவனார் கூறியபடி எப்படி "அ" கரம் எனும் முதல் எழுத்தின்றேல் மற்ற எழுத்துக்களை ஒலிக்க முடியாதோ, அதே போன்று பேர் உயிராகிய இறையருள் இன்றேல் சிற்றுயிர்கள் உலகத்தில் வாழ முடியாது என்று போதித்தார்கள். இவ்வுண்மையை மறந்தால் அல்லது புறக்கணித்தால் வாழ்வு நன்மையில் நிலைக்காது என்று தெளிவுப்படுத்தினார்கள்.

சைவ சமயம் தலைசிறந்த சமயம் என்று எல்லோராலும் பேசிக் கொண்டாடப் பெறுகின்றதே தவிர இதுபற்றி மேல் நாடுகளுக்குத் தெரியப்படுத்த ஓர் ஆளும் இல்லை; நூலும் இல்லை. தமிழில் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் போன்ற நூல்கள் நமது சைவசமயக் கொள்கைகளைக் கலங்கரை விளக்கம்போல இருந்து விளக்கித் திகழ்கின்றன. அதே போன்று நம் கொள்கைகளை மேல் நாடுகளில் பரப்ப, பிறநாட்டு அறிஞர்களுக்கு எடுத்துக் கூறத்தக்க ஓர் நூல் ஆங்கிலத்தில் இல்லை. இதுபோன்ற ஓர் நூலை யாத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப நாம் யாவரும் ஒன்றுகூடி முயற்சித்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

தற்சமயம் உலகத்தில் உலகாயதம் மிகவும் விரைவாகப் பரவி வருகின்றது. இதை ஒழிக்க வேண்டுமானால், இக் கூட்டம் பெருகவேண்டும். கடவுள் உண்டு என்று நம்பும் அன்பர்கள் ஒன்றுசேர்ந்து ஏற்றபடி வாழ்ந்து காட்டவேண்டும். அப்பொழுதே கடவுள் உணர்ச்சி பெருகும்.

சித்தியார் அறுவர் உரை போன்ற நூல்களை வெளியிட்டு எங்கும் பரப்பவேண்டும். சித்தாந்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டுமானால் அதற்குத் திறவுகோல் சமயாசிரியர் பாடல்களே. அவற்றைப் பலகால் உருகி உருகிப் பாடப் படிக்கவேண்டும். கடவுள் உண்டா? இல்லையா என்ற கேள்விகளுக்கு இடம் அளிக்கவேண்டும்; ஆனால் அது



வரம்பின்றிச் செல்லக்கூடாது; வெறும் அறிவாராய்ச்சியோடு நின்று விடுதல் கூடாது; உண்மையை அநுபவத்தில் உணரவேண்டும்; அதற்காக உருகவேண்டும்; அப்பொழுதே விடை கிடைக்கும். பெரியோர் பலரும் கடவுள் உண்டா? என்று கேட்டார்கள். அதற்காகப் பல இன்னல்களை அடைந்தார்கள். இறுதியில் அவர்கட்கு விடை கிடைத்தது. நம் உழைப்பு உண்மை உழைப்பாக இருக்கவேண்டும், இருந்தால் நமக்கும் விடைகிடைக்கும்.

பிற தோழர்கள் கடவுள் உண்டா? இல்லையா? என்று கேட்கும்போது நாம் வருந்தத் தேவையில்லை. கேள்வி உள்ள இடத்தில் உண்மை இருப்பின் தெளிவு உண்டாகும் என்பது நாம் அறிந்ததே.

பொதுவாக உலகத்தில் வாழும் மக்கள் கர்மம், விதி என்று கூறி வருகின்றனர். "ஊழிற் பெருவலி யாவுள?" என்று கூறி வாளா இருந்து விடுகின்றனர். இதனால் சோம்பல் வாழ்க்கை மிகுந்து அறிவு முன்னேற, விளக்கம் பெற வழியின்றிப் போய் விடுகின்றது. பழவினை உண்டுதான். "வினை விதைப்பவன் வினை அறுப்பான், தினை விதைப்பவன் தினை அறுப்பான்" என்ற பழமொழியும் உலக வழக்கில் உள்ளதுதான். ஆனால் அதேசமயத்தில் "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்" என்னும் குறளையும் நினைக்கவேண்டும். ஊழையும் உப்பக்கம் காணவேண்டுமானால் இடைவிடாது முயலல் வேண்டும். இறைவனிடத்தில் உண்மைப் பற்று வைத்து அவன் அருள் நெறியில் நின்றால் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை.

பிறவி வேண்டாம் என்று இந்துமதம் கூறுவதுபோல் தோன்றும். அப்படியே பலரும் கூறுவதையும் நாம் காண்கின்றோம். "வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும் பாதியும் உறங்கிப் போகும், நின்றதிற் பதினையாண்டு பேதை பாலகன் அது ஆகும் ஆதலால் பிறவிவேண்டேன்" என்று ஓர் ஆழ்வாரும் கூறுகின்றார். ஆனால் இதன் உட்பொருளை நாம் உணர்வதில்லை. பிறவி எடுத்தால்தான்

நம் பழவினை கெடுத்து நல்வினை புரிந்து உய்ய வழி உண்டு. ஆனால், பிறந்தும் குறிக்கோளின்றி வாழ்ந்தால் வினை அதிகரித்துப் பிறவி வளர்ந்து விடுகின்றது. அதனால் பிறவி வேண்டேன் என்று புலம்பவேண்டி நேரிடுகின்றது. ஆனால் உண்மையில் உயிரின் உய்வுக்கும் பிறவி தேவையே. பிறந்த பிறவியில் நாம் பெறும் இன்பமும் துன்பமும் நாம் வாழும் வகையையும் வழியையும் பொருத்ததேயாம்.

அடியார்கள் பக்திசெய்வது, பிறவியை ஒழித்துத்தான் வீடுபேறு அடையவே ஆதலின் அவர்கள் பக்தி தன்னலமே யன்றிப் பிறர்நலமாகாது என்றும் எண்ணலாம். மெய்யடியார்கள் "வீடும் வேண்டா விறலினர்" என்று சேக்கிழாரடிகள் கூறியுள்ள மொழியை நினைத்தால் அத்தகைய ஐயத்திற்கே வழியில்லை.

நீரிழிவு போன்ற வியாதிகள் உடலைப் பற்றியதில்லையென்றும் மருந்துகளாலும், அறுவையாலும் குணமாகுதல் இல்லையென்றும் இப்பொழுது முடிவுகட்டியுள்ளனர். அவைகள் மனத்தைப் பற்றிய நோய்கள் என்பதே மேல்நாட்டறிஞர் கண்ட உண்மை. இந்நோய்கட்கு மனம் எப்படிக் காரணம் ஆகும்? என்று நினைக்கலாம். கவலை மனத்தில் தங்கத் தங்க இந்நோய்கள் வலிவு பெறும். எப்படித் தேங்கிய நீர் நோய்க்கு இடம் கொடுக்கின்றதோ அதேபோல் தேங்கிய கவலையும் நோய்க்கு இடனளிக்கின்றது. எடுத்துக்காட்டாக ஒருவன் பிறிதொருவருடைய நாழிகை வட்டிலை (Watch) அடையவேண்டும் என்று எண்ணுகின்றான். திருடவும் மனம் இல்லை. திருடினால் பிறருடைய இகழ்ச்சிக்கு ஆளாகவேண்டுமே என்று எண்ணி வேட்கையை அடக்கிவிடுகின்றான். இதனால் வேட்ட பொருள் கிட்டவில்லையே என்கிற கவலையும் அதன் பயனாய் அவன் உடல் நிலைக்கேற்ப ஏதேனும் ஒரு நோயும் உண்டாய்விடுகின்றது. இப்படிப்பட்ட நோய்களை உளநூல் வல்லுநர்கள் அடக்கி விட்ட எண்ணங்களை உரையாடலின்போது வெளிக்கொணர்ந்து ஆறவிட்டு அதனால் குணப்படுத்த முடியும் என்று கூறுகிறார்கள்.



கத்தோலியர்களுக்குள் (Catholics) நோய் அவ்வளவாக வருவதில்லை யென்றும், அதன் காரணத்தை ஆராய்ந்ததில், அவர்கள் கிழமைக்கொரு முறை தவம் செய்து குற்றம் குறைகளைத் தம் குருவிடம் சென்று முறையிட்டுக் கொள்வதாகவும், அதனால் அவர்கள் மனத்தில் கவலை தேங்க வாய்ப்பில்லை யாதலின் அதன் தொடர்பான நோய்கள் வருவதில்லை என்றும் புலனாயிற்றாம்.

குற்றங் குறைகளைச் செய்தாலும் பிறரிடத்தில் ஒளிவு மறைவின்றி வெளியிடுதலே சிறந்தமுறை யென்றும் இதனாலேயே நோய்வாயினின்றும் தப்ப வழியுண்டு என்றும், உணர்கின்றோம் அல்லவோ? இப்படித் தம் குறைகளை நினைந்தோ மக்கள் குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு வருந்தியோ இறைவனை நோக்கி உலைவின்றி உருகியவையே நால்வர் திருப்பாடல்களாகும். இப்படிப்பட்ட அருள் நலம் தோய்ந்த பாக்களைப் பாடுவதால் மறுமை நலமட்டுமின்றி நோயின்மை முதலிய இம்மை நலமும் அடைவோம் என்று உணர்வோமாக.

இதன்பின் புலவர் முருகவேள், பி. ஓ. எல். அவர்கள் "காமம் சான்ற ஞானப் பனுவல்" எனும் பொருள் பற்றிப் பேசினார். இவற்றின் விரிவு அடுத்த இதழில் காண்க.

**தலைவர் முடிவுரை:** நண்பர் தேவ சேனாபதி அவர்கள் தம் பேச்சில் கன்மத்தைப் பற்றிப் பேசியது மிகவும் குறிப்பிடத்தக்கது. முன்வினைப் பகுதியின் பயனாய் இப்பிறவி வந்துளது என்பதும் உண்மையே. ஞானசம்பந்தர் ஊழையும் உப்பக்கம் கண்டவர். "வினை எம்மைத் தீண்டப் பெறா, திருநீலகண்டம்" என்று கூறிய திண்ணியர். வினையின் பெயரால் சோம்பேறியாய் இருத்தல் திருவருளுக்கும் சம்மதம் இல்லை. ஞானசம்பந்தர் சமணத்தை எதிர்க்குமுன் கடவுள் திருவருளை அறிய விழையும்போது அமணர் தீநெறியை ஒடுக்கவேண்டும் என்று ஆணை பிறந்ததே ஒழிய "எம்மதமும் சம்மதம் என்ற வெட்டிப் பெருநோக்கோடு வாளாவிருக்கும்படி குறிக்கப்படவில்லை. நெறி பிறழ்ந்து

செல்லுங்கால் நல்வழிப் படுத்துதல் இறையருளின் இயல்பே.

கவலையினால் நோய் வருகின்றது என்பதும் உண்மையே. தற்கால நாகரிகத்தில் கவலை மிக அதிகம். இக்காலத்தில் “ஊசி” முதலியன உடலில் செலுத்திக் கொள்வதால், உள்ள நோய்போய் பிறிதோர் நோய் வருகின்றது. குற்றங்களை முறையிடுதலால் கத்தோலியர்கட்கு நோய் வருவது குறைவு என்பது நாம் மனத்தில் இருத்த வேண்டிய ஓர் உண்மை.

நால்வர் இறைவனால் நமக்கு நல்வழி காட்ட அனுப்பப்பட்டவர்கள். உலகத்தில் பற்றின்றி வாழ்ந்தவர்கள். இறைவனிடத்தில் பற்று வைத்தவர்கள். நமக்கு நல்வழி சொன்னவர்கள். சொன்னபடி நடந்தவர்கள். இந்நூற்றாண்டில் காந்தியும் சொன்னபடி ஒழுகியவர்களில் ஒருவர். அதனால் அவருக்குப் பெருமை ஏற்பட்டது. வசதி குறைந்த அக்காலத்தில் சமயத்தை ஊர் ஊராகக் கால்நடையாகச் சென்று பரப்பியவர்கள் அப்பரும் மாணிக்கவாசகரும். சுந்தரர் குதிரைமேல் சென்று சமயத்தைப் பரப்பினார் என்று ஊகிக்க இடம் உள்ளது. சம்பந்தர் பல்லக்கில் சென்றது நாம் அறிந்ததே.

நால்வர்களைப் பின்பற்றிப் பாடல் பெற்ற தலங்கள் தோறும் சென்று பல்லாண்டுகளாகச் சமயத்தைப் பரப்பி வந்த அமைப்பு சென்னைச் சிவனடியார் திருக்கூட்டமாகும். இவ்வேலை இடையில் விடுபட்டு இருந்தது. மறுபடியும் தொடர்ந்து செய்கிற நிலைக்கு வந்திருப்பதறிந்து மிகு மகிழ்வெய்துகின்றேன். கூட்டம் கூட்டமாகத் திரண்டு தலயாத்திரை செய்வது முதன்மையே. அதேபோன்று அன்பர்கள் சங்கமாகக் கூடி வாரத்திற் கொருமுறையேனும் வழிபாடு செய்யவேண்டுவதும் கட்டாயமாக இருக்கிறது. இக்காலத்தில் இப்படிக் கூட்டு வழிபாடு செய்வதில் ஓர் இன்பம் இருப்பதாகவும் பலர் என்னிடத்தில் தம் சொந்த அடைவாக (அநுபவமாக)க் கூறியுள்ளனர். இதனால் தீய எண்ணம் அணுகாது மனம் நல்வழியில் ஈடுபட வாய்ப்பு உண்டு.



“காமம் சான்ற ஞானப் பனுவல்” என்ற தலைப்பில் புலவர் முருகவேள் அவர்கள் பேசியது மிகவும் புலமை நலம் தோய்ந்த ஒரு பேச்சாகும். இவர்கள் ஆசிரியர் மறைமலை அடிகள் நூலை நன்கு படித்தவர்கள். வெறும் உடலழகு நலம் பயப்பதில்லை. அதோடு ஒரு பேச்சாகும் உயிர் அழகு சேர்ந்தால் மிகுநலம்பயக்கும். அதேபோன்று வெறும் உலகக் காதல் பெரும் பயன் விளைப்பதில்லை. அதோடு இறையன்பு சேருமாயின் அதன் திறம் நன்கு விளங்கும். இவ்வியல்பை விளக்குவதே “திருக்கோவையார்” ஆகும். தமிழ்ப் பனுவல்களில் “திரு” எனும் அடைகொண்டது ஒரு சிலவே ஆகும். அவற்றில் ஒன்று திருக்கோவையார் என்றிருப்பது எவ்வளவு சிறப்பு. திருக்கோவையார் காதலுணர்ச்சியைக் கடவுள் உணர்ச்சியோடு சேர்த்து ஞாலமளந்த தமிழை ஞாலமளந்த தெய்வத் தமிழாக ஆக்கிய முதல் நூல் என்று பேச்சாளர் குறிப்பிட்டது மிகவும் சிறந்த கருத்து. நால்வர்களைப் பற்றிப் புலவர் முருகவேள் குறிப்பிட்ட கருத்துக்கள் அவர்கள் பாடல்களிலும் வரலாற்றிலும் அவர் எவ்வளவு தூரம் தோய்ந்திருக்கிறார் என்பதை நன்கு எடுத்துக்காட்டின. அவர் போக்கு மிகவும் போற்றத்தக்கது. அவருடைய உழைப்பிற்கு இறைவன் துணைபுரிவானாக ! என்று கூறி அமைகின்றேன்.

நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிந்தது.

## சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. சமாஜத்தின் 1951 டிசம்பர் 1ம் தேதி முதல் 1952 நவம்பர் 30ம் தேதிவரை உள்ள ஆண்டுக்கணக்குப் பரிசோதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. சமாஜத்தின் செயற்குழுக் கூட்டம் 26—10—52ல் கருதியபடி ஈரோட்டிலேயே 1953 ஏப்ரல் மாதத்தில் சமாஜ ஆண்டுவிழாக் கூட்டத்தையும் மாநாடுகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்வது நல்லது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. சமாஜத்திற்குப் புதுக்கட்டிடம் ஒன்று இராயப் பேட்டை பாலசுப்பிரமணியபக்தஜன சபையின் "குகானந்த நிலைய"த்தில் கட்டவேண்டும் என்னும் பழைய கருத்தைக் கைவிடுதல் நலம் என்று 7-12-52ல் சமாஜ செயற்குழு தெரிவித்த அபிப்பிராயத்தை இக்கூட்டம் ஒத்துக்கொள்வதுடன் சபையின் செயலாளருக்கும் இச்செய்தியைத் தெரிவித்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கின்றது.

4. மயிலாப்பூரில் குன்றக்குடி ஆதீனத்திற்குச்சொந்தமாயுள்ள திருவண்ணாமலைமட நிலத்தில் சமாஜத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதிபெற மேற்படி ஆதீனகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பித்து வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறது.

5. அவசரப் பிரேரணையாக உயர்திரு. சுந்தர விநாயக முதலியார் அவர்களால் முன் மொழியப்பட்டு, சைதை உயர்திரு. ஆடலரசு அவர்களால் பின் மொழியப்பட்டுக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாய் நிறைவேற்றப் பட்டன.

1. புதிய தமிழ் மாகாணத்திற்கு வடவேங்கடத்தையும் தென் குமரியையும் முறையே வடக்கு,தெற்கு எல்லைகளாகவும் அமைக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கின்றது.

2. இதனோடு சென்னையையும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளையும் ஒரு கமிஷனராட்சி மாகாண மாக்கவேண்டும் என்றும், சென்னையில் ஆந்திர மாகாணமாக்க அரசாங்க நிலையங்களும் தற்காலிகமாக இருக்க அனுமதி தரவேண்டும் என்றும் சிலர் கூறும் ஆலோசனைகள், சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாத்துறைகளிலும் அதிக குழப்பங்களையும் பெரும் இன்னல்களையும் விளைக்குமாதலால் அவற்றை அடியோடு அகற்றிவிட வேண்டும் என்று இக்கூட்டம் அரசாங்கத்தாரைப் பெரிதும் கேட்டுக்கொள்கின்றது.

ச. சச்சிதானந்தம் பிள்ளை, தலைவர்

---

## தமிழ்நாட்டு எல்லைத் தீர்மானம்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினரால் நாளது 1952 ஆம் வருஷம் நவம்பர் மாதம் 17௳ திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. அக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. ஆ. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல். தலைமை தாங்கினார்கள். அக்கூட்டத்தில் சேக்கிழார் கழகம், பாகம் பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி உரோமான் கத்தோலிக்க குருமார் ஆச்சிரமத்தார்களும், மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். அக்கூட்டத்தில் இதனடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. வடக்கே திருவேங்கடத்தையும் (திருப்பதியையும்), தெற்கே கன்னியாகுமரியையும், மேற்கே குடகையும், கிழக்கே வங்காள விரிகுடா கடற்கரையையும், எல்லைகளாக உடைய நாடு 'தனித் தமிழ்நாடு' என்பதை அதிகார பூர்வமாக சென்னை அரசியலாரும் மத்திய (இந்திய) அரசியலாரும் அங்கீகரிப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யும்படி இந்தக் கூட்டம் சென்னை முதல் மந்திரியார் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களை கேட்டுக் கொள்கிறது.

2. ஆட்சி மொழிக்கே முதன்மை ஏற்பட்டுத் தாய் மொழி வளம்குன்றி மங்குவது இயற்கையும் நடைமுறையிலும் இருப்பதால் மேலேகண்ட தனித் தமிழ்நாடு முழுவதும் தமிழ் மொழியே நீதிமன்றங்களிலும் மற்றும் எல்லா ஆட்சித்துறைகளிலும் ஆட்சி மொழியாக்கவும், ஆரம்ப உயர்தரக்கல்வி நிலையங்களில் மட்டுமல்லாமல் கல்லூரிகளிலும் தமிழ் மொழியே கற்பிக்கும் மொழியாக்கவும், வேண்டும் ஏற்பாடுகள் செய்யும்படி முதல் மந்திரியார் அவர்களை இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தோர்:—திரு. எஸ். அங்கப்பபிள்ளை அவர்கள், துணைத்தலைவர், சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி.

வழி மொழிந்தோர்:—1. திரு. கு. குற்றாலலிங்கம் பிள்ளை அவர்கள், துணை அமைச்சர், சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி, 2. திரு. கபிறியேல் சுவாமியார் அவர்கள், கத்தோலிக்க குருமார்கள் ஆச்சிரமம், தூத்துக்குடி 3. திரு. அமிர்தலிங்க முதலியார் அவர்கள், சேக்கிழார் கழகம், தூத்துக்குடி, 4. திரு. ச. சிவகாமி அம்மையார் அவர்கள், பாகம் பிரியாள் மாதர் கழகச் செயலாளர், தூத்துக்குடி, 5. வித்வான் திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள், தமிழ் ஆசிரியர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்மொழியின் ஆட்சிமுறை நடத்தியதில் தோல்வியுற்றதாகச் சொல்லுவது பொருத்தமில்லை என்றும் அந்நிலைக்குக் காரணம் தக்க தமிழ் அறிஞர் குழுவைத் துணைகொண்டு வழுக்களைந்து தொடர்ச்சியாக நடத்தாமையே என்றும், ஆதலால் தக்க தமிழ் அறிஞர் குழுவைத் துணைக்கொண்டு குறைகளைந்து ஆட்சி முறையும் கல்லூரிப் போதனையும் தமிழ் மொழியிலேயே நடத்தவேண்டுமென்றும் இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

முன்மொழிந்தோர்:—திரு. ஜி. தாமோதரன் அவர்கள், எம்.ஏ. தமிழ்விரிவுரையாளர், வ.உ.சி. கல்லூரி, தூத்துக்குடி.

வழி மொழிந்தோர்:—வி. எஸ். இராமசாமியா பிள்ளையவர்கள்.

மேலே கண்ட மூன்று தீர்மானங்களும் மேற்படி கூட்டத்தில் ஒரே மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

தெ. ச. சு. சோமசுந்தரம்,
அமைச்சர், சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி.

---

# ஆவின் பெருமை

(அ. த. ப. திருஞானசம்பந்தம்)

தமிழ்மொழி எழுத்துக்களில், ஓர் எழுத்துக்கொண்டு ஒரு பொருள் கூறும் எழுத்துக்கள் உள. எடுத்துக்காட்டாக, கா என்பது சோலையைக் குறிக்கும். நா என்பது நாவைக்குறிக்கும். அதுபோல ஆ என்ற எழுத்து



பசுவைக் குறிப்பதாகும். நம் முன்னோர்கள் ஆன்மாக்களையெல்லாம் பசுக்களெனக்கொண்டு அது இலயிக்கும் இடம் ஆலயம் என்றனர். பசுவை ஓம்பி வளர்த்திடும் நெறி முற்காலந்தொட்டே நம் நாட்டில் இருந்துவருகிறது. வெள்ளிக்கிழமைகள் தோறும், பல நற்றமிழ்க் குடும்பங்களில் பசுவுக்கு வழிபாடு நடைபெறுகிறது. கைதேர்ந்த மருத்துவ நிபுணர்களும் பசுவின் பாலில் எல்லா சத்துக்களும் அடங்கியிருப்பதாகக் கண்டாய்ந்துள்ளனர். தமிழர் தம் பெருவிழாவாகிய பொங்கல் திருநாளில் கதிரோனுக்குப் படைக்கும் பொங்கலமுதிற்குப் பால் ஊற்றித்தானே பொங்கப்படுகிறது. தொன்மைப் புகழ் நிறைந்த பெரிய புராணத்திலும் மூன்றடியார்கள், ஆனிரைகாத்த வரலாற்றை அறிகிறோமே! அவ்வரலாற்றிற்குரிய பெருமக்கள் யார்? 1. ஆனாயனார், 2. சண்டேசுரர், 3. திருமூலர். இவர்கள் யாங்ஙனம் ஆனிரைகாத்தார்கள் என்பதை அறியவேண்டுமல்லவா? மூவரும் ஆனிரைகாத்தவர்களாயினும், இடைப்பட்ட சண்டேசுரர் பெருமான் ஆனிரைகாத்து அதன் பயனும் பால்கொண்டு எம்பிரானுக்குத் திருமஞ்சனம் செய்தவராவர். இவர் ஆவின் பெருமையை உள்ளபடி உணர்ந்ததாகத்தெய்வச் சேக்கிழார் பகர்கின்றார்.

**ஆனாய நாயனார்:** இயற்கையின் வனப்பிலாழ்ந்து குழலூதி அதில் மூலமந்திரத்தை எழுப்பி, இன்னிசை பரப்பி ஆவினங்காத்தார் இந்த நாயனார். இவர் தம் குழலோசை கேட்ட கண்ணுதற் பெருங்கடவுள், அருட் கருணையே தானாய திருவுள்ளம்படைத்த வல்லியுடன், மதிநாறுஞ் சடைதாழ, விடையுகந்து வந்தாரெனின் அவ்விசையின் பெருமையை அளவிடல் சாலுமோ? தத்துவங்கடந்த பெருமானார், இசை இன்பத்தில் ஆழ்ந்தார் என்னின், புல்லிய அறிவுபடைத்த மக்களும், ஐயறிவும், அதிற்றாழ்ந்தும் வாழும் விலங்கினங்களும் ஈடுபடாதொழியுமோ? பசுக்கூட்டம், குழலூதுங்கால், அறுகருந்தி, அசைவிடாது அணைந்தயாவும், தாய் முலையைப்பற்றும் இளங்கன்றினமும்

உணவை மறந்தொழிந்து நின்றன. அதைப்போலவே விடைக்குலமும் மான் முதலாம் காட்டு விலங்குகளும் மயிர் சிலிர்க்க வந்தணைந்தன என்கிறார் சேக்கிழாரடிகள். அதை அவர் வாக்கால் உணர்க.

*ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்*
*பானுரை வாய்த்தாய் முலையில் பற்றும் இளங்கன்றினமும்*
*தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்*
*மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய*

—ஆனாயநாயனார் புராணம்

**சண்டேசுர நாயனார் :** முந்தை மருங்கு கிடந்த கோலை, மழுவெனக்கொண்டு தந்தையின் காலைத்தடிந்து வீழ்த்தி, இறைவனையே தாதையாகக்கொண்ட பெருமானார் இவரே. " நம் பொருட்டால் ஈன்ற தாதைவிழ எறிந்தாய்; அடுத்த தாதை இனி உனக்கு நாம் " என்று இறைவனருள் செய்ததாகப் புகலும் தொண்டர் சீர் பரவுவார் வாக்கை ஓர்க. தந்தையை ஏன் விழ எறிந்தார்? சேய்ஞ்சலூரில் தோன்றிய பிள்ளையார், ஆவினங்களைக் காப்போன் சரிவர காக்கவில்லை என்பதை அறிந்து, தானே அப்பணி செய்ய மேற்கொண்டு, அதுகாலை பசுக்கள் மணலில் சென்று பால் சொரிவதைக் கண்ணுற்று, அது வீணாகிறதே என்றெண்ணி, அப்பாலைக் குடத்தில் நிரப்பி, முந்தை நல்வினை கைகூடப் பெற்று சிவ பூசையில் ஈடுபட்டு, அப்பாலைப் பிரானார்க்குத் திருமஞ்சனம் செய்துவந்தார். இங்ஙனம் செய்து வருங் காலை, ஊரில் உள்ள அந்தணர்கள் இதனைக்கண்டுங் கேட்டும் வெகுண்டனர். நாயனாரின் தந்தைக்கும் அவர் செயல் தெரியவரவும், அவரும் நேரில் சென்று கண்ணுற்று, திரு மஞ்சனத்திற்குக் குடத்தின்கண் இருந்தபாலைக் காலால் தட்டி வீழ்த்தினார். நாயனாருக்குச் சினம் பிறந்தது. தாதையை விழ எறிந்தார். நாயனாரின் பெருமையைக் கூற வரும் சேக்கிழாரடிகள் என்ன கூறுகிறார் தெரியுமா? " **ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார்** " திருச்சேய்ஞ்சலூர் பிள்ளையார் என்றருளியுள்ளார். அடிகள் பாடலைக் காண்க.



*பாவுங்கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப்பான்மையினால்*
*மேவும் பெருமை அருமறைகள் மூலமாக விளங்குலகில்*
*யாவுந் தெளிந்தபொருள் நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்*
*ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற்கருள் செய்வார்.*

—சண்டேசுர நாயனார் புராணம்

**திருமூல நாயனார் :** இவர் ஒரு சிவயோகி. திருக்கயிலையினின்றும் அகத்திய முனியைக் காணுவான்வேண்டி புறப்பட்டு வந்தவர். இவரே மூவாயிரம் பாடல்கள் திருமந்திரம் எனப்பாடியருளியவர். திருக்கயிலையினின்றும் புறப்பட்டு, கங்கையாடி, திருக்காளத்தி நாதனை வணங்கி, திருவரங்கன் கழல் போற்றி, ஏகாம்பரநாதன் அடிபோற்றி, திருவதிகை சார்ந்து கலந்திறைஞ்சி, தில்லைப் பெருமானின் நற்றாள் போற்றி, கடல்வயிறு நிறையாத கடற்காவிரியாடி, பசுவின் கன்றுறையும் திருவாவடுதுறை சேர்ந்தார். பசுபதியார் செழுங்கோயில் வணங்கி, அங்கிருந்த போழ்து கோக்குலங் கள் புலம்புவதை எதிர்கண்டார். சாத்தனூர் அந்தணர் தம் பசு மேய்ப்பவனான மூலன் என்பானின் வாழ்நாளை வெந்தொழில்வன் கூற்றுண்ண நிலத்திடை வீழ்ந்து கிடக்க அப்பசுக்களெல்லாம் அவன் உடலிடத்து வந்தணைந்து சுற்றிமிகக் கதறி சுழன்று மோப்பதைக் கண்ட தவமுனிவர் " நம்பர் அருளாலே ஆவுற்ற துயர் இவை நீங்க ஒழிப்பன் " என உணர்கிறார். பின்னர் தம் உடம்பிற்கு அரண் செய்து, தவப்பெருமையால் தம்முயிரை அவன் உடலில் பாய்த்தினார். மூலன் உயிர் வாய்த்தெழுந்த களிப்பினால், பசுக்கள் துயரை நீக்கி வாலெடுத்துத் துள்ளின.

ஆனாயர் குழலூதி, ஆகுலத்தையும் பிறவற்றையும் இசை மகிழ்வில் ஆழ்த்தி இறையருள் பெற்றார். இடைப் பட்ட சண்டேசர் ஆகுலங் காத்து, அதன் பயனும் பால் கொண்டு இறைவர்க்குத் திருமஞ்சனமாட்டி தவற்றிற்குரிய தந்தையை மாள வீழ்த்தி இறையருள் பெற்றார். திருமூலர் கையிலையினின்றும் வந்த நோக்கத்தையும் அறியாது, உற்ற நோயைக் கண்ணுற்றுப் பொறாராகி, தன் உயிரை வெற்றுடலுக்கு ஈந்துபசுவினத் துயிரைக் காத்து இறைவன் அரு

ளுக்கு உரியரானார். இதுவரை பெரிய புராண அடியார்கள் ஆவினங்கள் பால் கொண்டிருந்த தொடர்பு யாங்ஙனமுளது என்பதைக் கண்டோம். இனி இலக்கியங்களில் பசு எங்ஙனம் போற்றப்படுகிறது என்பதையும் சுருங்கக் காண்போம்.

**சிலம்பில் பசு :** தன் கணவன் கோவலன் கொலையுண்டான் என்ற செய்தியைக் கேட்டு, தலைவிரி கோலமாகப் பாண்டிய மன்னன் கோயிலை அடைந்து, உண்மையை எடுத்துக்காட்டி, தன் கணவன் கள்வன் அல்ல என்பதை விளக்கிக் காட்டி அநீதிமன்னன் ஆட்சிக்கு உட்பட்ட மதுரையை அழிப்பேன் என வஞ்சினமேற்று வெளியே வருகிறாள். கண்ணகி தனது இடது கொங்கையை வலக்கையால் திருகி எடுத்து அதை அந்நகர்மீது எறிந்தாள்.

எறியவே அக்கினி தேவன் முன்தோன்றி கற்பரசி! உனக்குப் பிழை செய்த நாளில் இவ்வூரை எரித்து விடும்படி முன்னமே ஓரேவல் பெற்றுள்ளேன். இப்பொழுது யாரை அழிக்கவேண்டும் என்று கேட்டான். சினத்தைப் பொருளென்று கொள்ளுங்கால், பகுத்தறிவும் நிலை தவறுவதோடன்றி, உயிருக்கே ஊறு நேரினும் நேரலாம் என்பர் கற்றறிபுலவர். அத்தகையதோர் சினத்தின் வாயில் பிடியுண்டு நிற்கும் கண்ணகியின் அறிவு வீண் ஆரவாரப்பட்டு, கண்டபடி செல்லவில்லை. எவ்வளவு வரையரை செய்து, அறவழி நின்று அக்கினி தேவனை அழல்படுத்தும்படி ஆணையிடுகிறாள் பாருங்கள்! அதுவும் நூலறிவு பெற்ற நுண்மதி வாய்ந்த புலமை யுடையோர்களையும், அறவோரையும் கூறிப் பசுவையும் கூறி அதற்குப்பிறகே கற்புடை மகளிரையும் நீக்கித் தீக்காய்க என்று ஆணையிடுவது ஈண்டு சிந்தனைக்குக் கொள்ளவேண்டிய தொன்றாம்.

“ பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவியெனு மிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி யேவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூட னகர்.
—வஞ்சினமாலை



**குறளில் பசு :** தெய்வப் புலவர் வள்ளுவர் பேசாத உலகியற் பொருள்களே இல்லை எனலாம். அவர் பசுவைப் பற்றியும் பேசுகிறார்! எங்கே பேசுகிறார்? பொருட்பாலில் பேசுகிறார்! எதற்காகப் பேசுகிறார்? மன்னன்தன் ஆட்ம் சரியில்லையென்றால் நாட்டின்நிலை எப்படியிருக்குசி என்று கூற வரும்பொழுது பசுவைப் பயன் படுத்துகிறார். ஒரு மன்னன் தன்னாட்டைக்கடும்புலி வாழும் காடாக ஆக்கி ஆண்டால் அந்நாட்டிலே வராத கேடுகளெல்லாம் வந்து சூழும். அங்ஙனம் சூழ்கின்ற கேடுகளில் முதன்மை வாய்ந்தவை பசுவின் பயன் குறைதலும், அறுதொழிலியற்றும் அந்தண்மை பூண்ட செந்தண்மையாளர்கள் கற்ற மறையை மறந்தொழிதலும் ஆகும். இதை அவர் வாக்கால் காண்க.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.
—குறள்

**ஆவின்பால் :** சேற்றிலே பிறக்கிறது செந்தாமரை; சிப்பியின் உடலிலே தோன்றுகிறது முத்து; ஒருவகைப் பூனையின் உடலிலே தோன்றுங் கழிவு பனுகு; பட்டுப் பூச்சியின் எச்சிலிலே தோன்றுவது பட்டு; இவையெல்லாம் இறைவனுக்கு உகந்தவையாகின்றன. அனைத்தும் தோன்றிய இடத்தால் இழிவினதாயினும், தன்னிலையில் ஒவ்வொன்றையும் நோக்கும்பொழுது பெருமை அடைகிறது. தோன்றும் பொருளால் தோற்றுவிக்கும் பொருளுக்கும் பெருமை உண்டு என்பதை அறிகிறோம். அங்ஙனங் காணுங்கால் பசு இவ்விடத்தில் ஏற்றம் உறுகிறது. பசுவின் குருதி நீரே பாலாக மாற்றமடைந்து வெளி வருகிறது. அஃது இறைவனுக்கு அபிடேகத்திற்சன்றே பயன்படுகிறது. நல்லனவற்றிற்கும், இறுதிச் சடங்குகட்கும் பசுவினின்றும் பெறும் பயன்கள் உதவியாகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை.

ஒரு பொருளின் ஏற்றத்தைத் “ தாமின்புறுவது ” உலகின்புறக் காமுறும் பொது நோக்குக் கொண்ட புலவன் வாயினின்றும்தான் அறிதல்வேண்டும். அப்பொழுதுதான்

உண்மையான ஒரு பொருளின் உயர்வை எடைபோட்டுத் திட்டமிடலாம். செய்நன்றியை மறவாத தன்மையாளர்கள் புலவர்களே என்பதற்குப் புறப்பாடல்களே இயையும். பெரும் புலமை வாய்ந்த புலவர்பெருமக்கள் ஆவின் பாலை எவ்வளவு அழகாக இடங்கருதி, ஆழ்ந்த அனுபவ வாயிலாகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை நம்மனோர் கண்டும் படித்தும் இலயித்தும் இன்புறத்தக்கதாகும். (தொடரும்)

---

## மதிப்புரைகள்

1. திருக்குறள் உரைவளம் : மூன்றாம் பகுதி - காமத்துப்பால் : தருமபுர வெளியீடு. விலை ஆறு ரூபாய். மிக உயர்ந்த பதிப்பு.

ஆதீன கர்த்தர் மகாசந்நிதானம் அவர்களின் ஆணைப்படி வித்வான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் தொகுக்கப்பட்டது. அரிய ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து நாளதுவரை கிடைத்துள்ள உரைகளை எல்லாம் தொகுத்தும், உரைவிளக்கப் பகுதி, ஒப்புமைப்பகுதி, மேற்கோள்கள், உரைவிளக்கங்கள் முதலியவைகள் எல்லாம் சேர்த்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. திருக்குறளைப் பற்றி ஆராய்ச்சி உரைமட்டும் 136 - பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சி உரை மாணவர்களுக்குமட்டுமன்றி, அறிஞர்களுக்கும் பலவகைகளில் பயன்படும். நாளதுவரை அறிஞர்கள் ஆராய்ந்துள்ள கருத்துக்கள் எல்லாம் இவ்வுரையில் தொகுத்து முடிபுகள் கட்டப்பெற்றுள்ளன. இவ்வாராய்ச்சிக்கு 40-நூல்கள்வரை எடுத்தாளப்பட்டுள்ளன. அட்டைப் படம் சிறந்த நோக்கம் கொண்டது. திருக்குறள், இங்கிலாந்து, ஜெர்மனி, ருசியா, இட்டலி, அமெரிக்கா, சீனா, ஸ்பெயின், பிரான்சு முதலிய பல நாட்டு மொழிகளிலும், மொழிபெயர்த்து விளங்குவதை சித்திர உருவமாக தீட்டப்பட்டுள்ளது. திருவள்ளுவர் படங்கள் 2-அடங்கியுள்ளன. இதைப் போன்ற திருத்தொண்டு தமிழில் இதுவரை ஒருவரும் செய்ததில்லை.



இவ்வரிய திருத்தொண்டிற்குத் தமிழ்நாடு ஆதீனத்தாருக்கு என்றைக்கும் கடமைப்பட்டிருக்கும்.

2. கந்தபுராணம் மூலம் - முதற்பகுதி - மூன்று காண்டங்கள் : திருப்பனந்தாள் ஆதீன வெளியீடு. விலை ரூபாய் 2-12-0. கிடைக்குமிடம் குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

அண்மையிலே திருப்பனந்தாள் காசிமடத்தார்கள், சைவத் திருமுறைகளையும், மற்ற சைவ நூல்களையும், எளியவர்களும் பெற்றுப் படிக்கும் வண்ணம், முறையாகப் பதிப்பித்து வருகின்றார்கள். அவைகளிலே இந்த நூலும் ஒன்று. பதிப்பு நன்றாக இருக்கின்றது. படிப்பதற்கும் எளிதாகயிருக்கின்றது. 2-ம் பகுதியையும், விரைவில் வெளியிடுவார்கள் என்று நம்புகிறோம். மடத்தாருக்குத் தமிழ்நாடு கடமைப்பட்டுள்ளது.

3. சைவ சித்தாந்தம் : ஆசிரியர் - திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம், மதுரை. பதிப்பாளர் திரிசிரபுரம், சைவசித்தாந்த சபை, திருச்சி. விலை ரூ. 1-0-0.

ஆசிரியர், தென் நாட்டில் பேர்பெற்ற பேச்சாளர். ஆங்கிலத்திலும், தமிழிலும் நிபுணர். உரைநடையேயன்றி, செய்யுள் இயற்றுவதிலும் வல்லவர். சென்னை வானொலியில் ஆங்கிலத்தில் ஒலிபரப்பிய மூன்று பேச்சுக்களைத் திரட்டி ஒரு சிறு நூலாக வெளியிட்டிருக்கின்றார். குறுகிய அளவிலே சைவத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் இதனைப் படித்து அறிந்துகொள்ளலாம். நடராஜ தத்துவம் மிக அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது. தமிழ் அறியாத ஆங்கிலருக்கு இந்நூல் மிகவும் பயன்படும். பல வண்ணங்கள் கொண்ட நடராஜ படம் ஒன்று இதில் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இந்நூலை ஆதரிப்பார்களாக.

4. திருநாவுக்கரசர் பதிற்றுப்பத்தந்தாதி : ஆசிரியர் - திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம்.

குன்றக்குடி, மகா சந்நிதானம் திருவுள்ளப் பாங்கின்படி வெளியிடப்பட்டது. செய்யுட்கள் தெளிவான நடை

யில் எழுதப்பட்டுள்ளன. அங்கங்கே திருநாவுக்கரசரின் சொற்றொடர்களையே எடுத்துப் பாடல்களில் அருமையாக அமைத்திருக்கின்றார். மேலும் திருநாவுக்கரசரின் அரிய பெரிய கருத்துக்களையும் அங்கங்கே தெளிவுபடுத்திச் சேர்த்திருக்கின்றார். திருநாவுக்கரசருடைய திருவுருவத்தின் தன்மைகளையும் அங்கங்கே போற்றியிருக்கின்றார். இவைகளுக்கெல்லாம் உதாரணங்கள் எடுத்து இங்கே காட்டுவதைக் காட்டிலும் அன்பர்கள் அந்நூலை வாங்கிப் படித்தே தெரிந்து கொள்ளலாம்.

5. திருப்பழநி வெண்பா அந்தாதி : ஆசிரியர் - திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம், மதுரை.

நூறு வெண்பாக்கள் அடங்கிய நூல். தெளிவான செய்யுட்போக்கில் அமைந்தது. எவரும் எளிதில் மனப்பாடம் பண்ணலாம். சிறந்த கருத்துக்கள் எளிய ஓடும் தமிழில் பாடப்பட்டுள்ளன. தமிழ்நாடு இந்நூலைப் போற்ற வேண்டும். நூல் ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

6. குன்றக்குடி அருள்நெறித் திருக்கூட்டம் அவர்களால் வெளியிடப் பெற்றுள்ள "பெரியார் அவர்களுக்கு நமது விடைகளும் வினாக்களும்" எனும் நூல் மிகவும் அழகாக எழுதப்பட்டுள்ளது. அரிதின் முயன்று தெள்ளிதின் விளக்கியுள்ளது. பல ஐயங்களைப் போக்கவும் வல்லதே.

---

இரங்கற்கூட்டம்:— சென்னைச் சைதாப்பேட்டையில் பன்னெடுங்காலமாகச் சளையாது இடையீடின்றிச் சைவத் தொண்டு புரிந்து வந்த திருவாளர் பழநிமுதலியார் அவர்கள் 27-12-52 அன்று மறைந்தது குறித்துத் திரு. ம. சி. நடராசமுதலியார் (சைதை வர்த்தக சங்கத் தலைவர்) அவர்கள் தலைமையில் 5-1-53 திங்களன்று மாலை 6-30 மணிக்குச் சைதைப் பெரியப் பேட்டை, நடராசர் சபையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் [illegible] மற்றும் பல அறிஞர்களும் கலந்து கொ[illegible]னர்.

18836

22—12—52 முதல் 29—12—52 வரைத் தில்லைத்
திருவாதிரைத் திருவிழா : திருமுறைக் கழகத்தார்கள்
எட்டு நாள்களும் முறையாகச் சொற்பொழிவுகள் நடத்தி
வைத்தார்கள். இருபது அறிஞர்கள் பங்கெடுத்துக்
கொண்டார்கள். சிவஞானபோதப் பொருளுரை 10
நாட்கள் நடைபெற்றது. தேவார ஆசிரியர் இராமலிங்க
ஓதுவார் திருமுறை ஓதினர். இந்த ஆண்டு கோயில்
பொதுத் தீக்ஷிதர்களால் இவ்விதமாகத் திருவிழா நடை
பெற்று வந்ததைக் கண்டு தமிழ்நாடு மகிழவேண்டும்.

27—12—52. கோவை : பழைய ஐவுளிக் கடைத்
தெருவில் மதுரை, திருவாசகமணி, திரு. கே. எம்.
பாலசுப்பிரமணியம் அவர்கள், "கடவுள் வணக்கம்"
என்பதைப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

கோவைத் தமிழ்ச் சங்கச் செயல்கள்

23—11—52. தலைவர்: சித்திரகவி கலியாணசுந்தரக்
கவுண்டர். சொற்பொழிவாளர் : திரு. இராஜகோபால்.
பொருள் : "திருவாசகம்".

7—12—52. தலைவர் Dr. N. சுப்பிரமணியம்.
சொற்பொழிவாளர் : T. R. முத்துக்கிருஷ்ண பிள்ளை.
பொருள் ; பாரதம் "பழம் பொருந்து சருக்கம்"

21—12—52. தலைவர்: C. K. சுப்பிரமணிய முதலி
யார். சொற்பொழிவாளர் : வடமொழிப் புலவர் ஸ்ரீ விஜய
ராகவாச்சாரியார். பொருள் : "திருப்பாவை".

தமிழ்நாட்டு வடவெல்லை பாதுகாப்புக் கமிட்டி:— ஷை
குழுவின் சார்பில் 5-1-1953 மாலை 4மணிக்குச் சால்வீதி,
திருத்தணிகையில் தமிழ்நாட்டு வடவெல்லை மாநாடு நடை
பெற்றது. திருவாளர் மேயர் T. செங்கல்வராயன் B. A.
B. L. அவர்கள் தலைமை யேற்றார். தணிகை, வேங்கடம்,
சித்தூர், புத்தூர், குப்பம், பல்லவனேரி உள்ளிட்ட தமிழ்
மாகாணம் பிரியவேண்டும் என்னும் கருத்துடைய தீர்மானங்
களைத் திருவாளர்கள் Dr. எஸ். குருபாதம், ம. வெ.
சிவஞானம் M. L. C, ப. சிவானந்தம், M. L. A, எஸ்.
அரங்கநாதமுதலியார், B. A., B. L., வி. கே. சடகோபாச்
சாரியார் (காந்தி சேர்த்தி), ஆசிரியர் மங்கலங்கிழார், இ. எஸ்.
தியாகராசன் முதலியோர் வலியுறுத்திப்பேசினர்.

## சமாஜ வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் | ... | 3 | 0 |
| நாலாயிரதிவ்ய பிரபந்தம் | ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | ... | 1 | 0 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 4 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) | ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. | ... | 0 | 2 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி | ... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street (Zones Road), Saidapet, Madras-15, P.I. Card No. M. S. 81.